விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 26 சனிக்கிழமை (10.01.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 022




## ஆனையிறவு கைப்பற்றப்பட்டது

# 23 வருடங்களின் பின்னர் ஏ-9 வீதி இராணுவத்தின் கட்டுப்பாட்டில்!



### தொலைக்காட்சி ஊடாக ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

ஏ-9 பாதை முழுமையாக அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட்டுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தியோகபூர்வமாக அறிவித்தார். நேற்றுப் பிற்பகல் 5 மணியளவில் தேசிய தொலைக்காட்சியில் விசேட உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதனை அறிவித்தார். அவ்வப்போது ஏ-9 பாதையின் சில பகுதிகளை பாதுகாப்பு படையினர் கைப்பற்றியிருந்தாலும் 23 வருடங்களுக்குப் பின்னர் தற்பொழுது அதனை இராணுவத்தினர் முழுமையாக தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்திருப்பதாகவும் அவர் கூறினார். (14ஆம் பக்கம் பார்க்க)

### திருத்தவேலை காரணமாக நாளை மின்சாரம் தடைப்படும்

சுன்னாகம் பிரதான மின் வழங்கல் வலைப்பின்னலில் அவசர திருத்தவேலை களைச்செய்வதற்காக நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை யாழ்.குடாநாடு முழுவதும் மின் சார விநியோகம் தடைப்பட்டு இருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறி வித்துள்ளார். (ச)

### பொறிவெடியில் சிக்கி படை அதிகாரி பலி

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் இருந்து பின்வாங்கிச் செல்லும் விடுதலைப் புலிகளின் பொறி வெடியில் சிக்கி நேற்று முன்தினம் லெப். கேணல் நலிந்த குமாரசிங்க கொல்லப் பட்டுள்ளார்.

பளையில் இருந்து முன்னேறிச் செல் லும் படையினருடன் சேர்ந்து நலிந்த குமார சிங்க சென்றபோது புலோப்பளையில் பொறிவெடியில் சிக்கியுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது.

இவரது ஜீப் வாகனம் சேற்றுப் பாதை யில் பயணம் செய்துகொண்டிருந்தபோதே பொறிவெடி வெடித்துள்ளது.

இவருடன் சமிக்ஞை அதிகாரியும் கொல் லப்பட்டதுடன் மேலும் இருவர் காயமடைந் துள்ளனர். (14ஆம் பக்கம் பார்க்க)

## லசந்தவின் கொலையை கண்டித்து கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி



(கொழும்பு)

சண்டே லீடர் வார ஏட்டின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படு கொலை செய்யப்பட்டதனை கண்டித்து தலைநகர் கொழும்பில் நேற்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது.

நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை நடை பெற்ற இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் நூற்றுக்கணக்கான ஊடகவியலாளர்கள்,பொதுஅமைப்புக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கள் கலந்து கொண்டனர்.இதில் மகிந்த அரசாங்கத்திற்கு எதிராக முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

சுதந்திர ஊடக இயக்கம், உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் உட்பட ஐந்து ஊடக அமைப்புக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டப் பேரணி லேக் ஹவுஸ் அரச பத்திரிகை (13 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நாடாளுமன்றம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி நேற்று வெள்ளிக்கிழமை நாடாளுமன் றத்தில் நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் காரண மாக எதிர்வரும் 20ஆம் திகதிவரை நாடாளு மன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசி ரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை யைக் கண்டித்து ஐக்கிய தேசியக்கட்சியினர் சபாபீடத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத் தினர்.

இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக ஆளும் தரப்பினருக்கும், எதிர்க்கட்சியினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. எனி னும், கூச்சல் குழப்பங்களுக்கும் மத்தியில் சபையின் அன்றாட நடவடிக்கைகள் முன் னெடுத்துச் செல்லப்பட்டன.

அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கை யில்லாப் பிரேரணை நேற்று விவாதத்துக்கு எடுத்துக் (14ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் 2 நாட்களில் ஏழு பேர் சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் கடந்த 2 நாட்களில் 3 பொதுமக்கள் உட்பட 7 பேர் சுட்டுக் கொல் லப்பட்டிருப்பதாக வவுனியாப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 7.30 மணியளவில் வவுனியா பண்டாரிக் குளம் பகுதியில் நடராஜா பத்மசிறி (வயது 37) என்பவரும், கற்பகபுரத்தில் இருளாண்டி சிவ சுந்தரம் (வயது 36) என்பவரும், செட்டிக் குளம் பூவசரக்குளம் வீதி மணியர்குளம் பகுதி யில் மற்றுமொருவரும் சுட்டுக் கொல்லப்பட் டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

மணியர்குளம் பகுதியில் சுட்டுக்கொல்லப் பட்டவர் இதுவரை அடையாளம் காணப்பட வில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, சிடாச்சூரிக்கும் பம்பைமடு வுக்கும் இடைப்பட்ட பகுதியில் ஊடுருவ முற் பட்ட விடுதலைப் புலிகள் மீது இராணுவத்தி னர் தாக்குதல் (14ஆம் பக்கம் பார்க்க)

## லசந்த படுகொலை,சிரச மீதான தாக்குதல் பின்னணியில் இராணுவப் புலனாய்வுப் பிரிவு

### குற்றம் சாட்டுகிறார் ரணில்



(கொழும்பு)

சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை மற்றும் சிரச தொலைக் காட்சி மீதான தாக்குதல்கள் ஆகிய வன்முறைகளின் பின்னணியில் இராணுவப் புலனாய்வுத்துறையின் ஒரு குழுவே செயற்பட்டுள்ளது என்று எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று சபையில் குற்றம் சுமத்தினார்.

இராணுவத் தளபதிக்கும் (13 ஆம் பக்கம் பார்க்க)

இது ஒரு விளம்பரம்

உங்கள் வங்கி உலகில் முன்னிலையில் உள்ள வங்கியா?

முதலீடு செய்வதற்குத் தீர்மானிக்கும்போது, நிதி நிறுவனத்தின் ஸ்திரத்தன்மை, நம்பிக்கை என்பவற்றில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும் என்பதை மீண்டும் ஞாபகப்படுத்தும் முகமாக பண வைப்பாளர்களுக்கு மிகவுயர்ந்த பாதுகாப்பை வழங்குவதில் முன்னணி நிலையை நிரூபித்துள்ள இலங்கையின் வங்கியான...

(தயவுசெய்து 6ம் பக்கத்தைப் பார்க்கவும்)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கிணற்று நீர் சுத்தம் செய்வதில் இடையூறு

# பருத்தித்துறை பிரதேச மக்களுக்கு சுகாதாரப் பணிப்பாளர் பகிரங்க மடல்

**பருத்தித்துறை மத்திய மருந்தகத்தில் உள்ள கிணற்றை இறைத்து சுத்தம் செய்தபோது சிலரால் இடையூறு விளைவிக்கப்பட்டுள்ளது.**

**இது தொடர்பாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் "பருத்தித்துறை மக்களுக்கு ஒரு பகிரங்க மடல்" எனத் தலைப்பிட்டு அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பு அப்படியே இங்கு பிரசுரமாகின்றது.**

அண்மையில் ஏற்பட்ட புயல் வெள்ள அனர்த்தங்களின் பின்னர் யாழ். மாவட்டத்தில் உள்ள கிணறுகள் யாவும் மாசடைந்துள்ளன. இவை யாவும் இறைத்து சுத்திகரிக்கப்பட்டு குளோரின் இடப்பட வேண்டும்.

வைத்தியசாலைக் கிணறுகள், பாடசாலைக் கிணறுகள் மற்றும் பொதுக்கிணறுகளை பல்வேறு நிறுவனங்களின் உதவியுடனும் உள்ளூராட்சி மன்றங்களின் உதவியுடனும் இறைத்து சுத்திகரிக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

அந்த அடிப்படையில் யாழ் . மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைக் கிணறுகள் எல்லாவற்றையும் இறைத்து சுத்திகரிக்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் முன்வந்துள்ளது.

இதன் பிரகாரம் பல வைத்தியசாலைகளில் இப்பணிநடைபெற்றுள்ளது.

இப்பணிக்காக பருத்தித்துறை நகரில் அமைந்துள்ள மத்திய மருந்தகத்தில் கிணற்றை இறைத்து துப்புரவாக்குவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இக்கிணற்றில் வைத்தியசாலைக்கும் பருத்தித்துறை நகரசபைக்கும் தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் பங்கு இருந்தமையினால் இக்கிணறு இறைப்பது சம்பந்தமாக நகர சபையின் செயலாளருக்கும் சம்மந்தப்பட்ட தனியாருக்கும் அறிவிக்கப்பட்டது.

மேலும் இக்கிணற்றுக்கு அருகே உள்ள விளையாட்டுமைதானத்தை பாவிக்கும் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் முக்கிய உறுப்பினர் ஒருவருக்கும் இவ்வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியினால் அறிவிக்கப்பட்டது.

இவர்கள் அனைவரும் இக்கிணற்றை இறைப்பதற்கு சம்மதம் தெரிவித்திருந்தனர்.

எதுவித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை.

எனவே ஏற்கனவே திட்டமிட்டபடி 08.01.2009 வியாழக்கிழமை காலை 11 மணிக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பணியாளர்களால் கிணறு இறைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

காலை 11.30 மணியளவில் ஐக்கிய விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் என மோட்டார் சைக்கிளில் வந்து மூவர் நீர் இறைக்கும் பணியை உடனடியாக நிறுத்தும்படி கூறினர்.

பிரச்சினைகள் எதுவும் ஏற்படாதிருக்க அப்பணி உடனேயே நிறுத்தப்பட்டது.

அரை மணித்தியாலத்தின் பின்னர் திரும்பி வந்த அந்த மூவரும் கிணறு இறைப்பதைத் தொடரலாம் எனக் கூறினார்கள்.

எனவே கிணறு இறைக்கும் பணி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

மதியம் ஒரு மணிபோல் ஐக்கிய விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் என கூறிக்கொண்டு மூன்று மோட்டார் சைக்கிள்களில் வந்த ஐந்துபேர் மிகவும் கடுமையான வார்த்தைகளால் அங்கு கடமையிலிருந்த வைத்தியசாலை பெண் பொறுப்பு வைத்திய அதிகாரியை அச்சுறுத்தி உடனடியாக கிணறு இறைக்கும் பணியை நிறுத்துமாறு மிரட்டினர்.

நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் உபகரணங்களை சேதமாக்கப்போவதாக அச்சுறுத்தினர்.

இதனால் நீர் இறைக்கும் பணி நிறுத்தப்பட்டது.

வெள்ளத்தினால் மாசடைந்த கிணற்று நீரைப்பாவிப்பதனால் வைத்திசாலைக்கு வரும் நோயாளர்களுக்கு பாதிப்பு ஏற்படும்.

அதனாலேயே நாம் இக்கிணறுகளை சுத்திகரித்து வருகின்றோம்.

இப்பிரதேச மக்களின் நலனுக்காகவே இப்பணியை நாம் செய்து வருகின்றோம் என்பதை அனைவரும் உணரவேண்டும்.

விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் சிலரது அச்சுறுத்தலுக்கு உள்ளான வைத்திய அதிகாரி இவ் வைத்தியாசாலையில் பணியாற்ற மறுத்துவிட்டார்.

இத்தகைய அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் இவ்வைத்தியசாலையில் பணியாற்ற ஏனைய வைத்தியர்களும் மறுத்துவிட்டனர்.

யாழ். மாவட்டத்தில் எத்தனையோ நெருக்கடிகளின் மத்தியில் மிக மோசமான வைத்தியர்களின் பற்றாக்குறை நிலவும் வேளையில் மிகக் குறைந்த அளவிலான வைத்தியர்களே அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றனர்.

அவர்கள் மீது இப்படிப்பட்ட கீழ்த்தரமான அச்சுறுத்தல்களை விடுப்பது வெட்கித்தலைகுனிய வேண்டிய செயலாகும்.

இச்சம்பவத்தையிட்டு வைத்திய அதிகாரிகள் அனைவரும் மிகுந்த மனவேதனைக்கு உள்ளாகி உள்ளனர். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இவ் வைத்தியசாலையில் பணிபுரிய வைத்தியர்கள் எவரும் முன்வராததால் மறு அறிவித்தல் வரை இவ்வைத்தியசாலையின் சேவைகளை இடைநிறுத்த நாம் நிர்ப்பந்திக்கப்பட்டதை வேதனையுடன் அறியத்தருகின்றேன்.

இதில் சம்மந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்படவேண்டும். இது போன்ற சம்பவங்கள் மீண்டும் நடைபெறாது இருப்பது உறுதிசெய்யப்படவேண்டும்.

பருத்தித்துறை வாழ் சமூகப் பெரியோர்களே!

மருத்துவப் பணியாளர்கள் மக்களுக்கு தங்கள் சேவைகளை சுமுகமாக வழங்குவதற்கு உரிய சூழலை ஏற்படுத்தித்தாருங்கள். அத்தகைய சூழல் ஏற்படுத்தப்பட்டவுடன் எமது பணிகளை நாம் மீண்டும் தொடருவோம்.

## கூடைப்பந்தாட்ட இறுதிப்போட்டி

யாழ் மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம், பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையில் நடாத்துகின்ற ஆண், பெண் இருபாலாருக் குமான கூடைப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி மற்றும் 3ம் இடத்திற்கான போட்டிகள் இன்று கொக்குவில் இந்துக்கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் இடம்பெற உள்ளன.

ஆண்கள் இறுதிப்போட்டியில் பிற்பகல் 4 மணிக்கு சென்ற லைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் பிற்பகல் 2 மணிக்கு கே.சி. சி.சி. விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து D.E மசனட் விளையாட்டுக்கு கழகமும் ஆடவுள்ளன.

பெண்களுக்கான 3ம் இடத்திற்கான போட்டி பிற்பகல் 12.30 மணிக்கு வட்டப்பிளை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பமிலியன்ஸ் சிவப்பு விளையாட்டுக் கழகமும், பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் இறுதிப்போட்டியில் பமிலியன்ஸ் வெள்ளை அணியை எதிர்த்து கே.சி.சி.சி அணியும் மோதுகின்றன. (ச)

## மின்னிணைப்பு பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சினால் யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தின் ஊடாக மின்னிணைப்பு பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தினை பிரதேச செயலர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 20.01.2009க்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். விண்ணப்பதாரிகள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மின் இணைப்பு பயிற்சிநெறிக்கான விண்ணப்பம்" என்பதனை தெளிவாக எழுதவேண்டும் என யாழ்ப்பாண பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ அறிவித்துள்ளார். (ச)

## நிர்ணயிக்கப்பட்ட விலையில் பொருட்கள் விநியோகம்

புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூ. சங்கம், கிளைகளில் யாழ் அரசாங்க அதிபரினால் நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் அரிசி, மா, சீனி, மண்ணெண்ணெய் மற்றும் பால்மா வகைகளை மக்கள் தமது தேவைக்கு ஏற்பப் பெற்றுக்கொள்ள முடியும் என தலைவர் டாக்டர் க. இராஜரெட்ணம் தெரிவித்துள்ளார்.

## தொண்டராசிரியர்கள் ஒன்று கூடவும்

அனைத்துத்தொண்டர் ஆசிரியர்களையும் ஆரியகுளம் சந்தியிலுள்ள புதிய உயர்கல்லூரியில் எதிர்வரும் 12ஆம் திகதி காலை 8.30க்கு சமுகம் தரும்படி யாழ். மாவட்ட தொண்ட ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச)

## கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட உணவுப் பொருட்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கப்பல் மூலம் யாழ். மாவட்டத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ள சீனி,சிவப்பு நாட்டரிசி,சம்பா அரிசி, கோதுமை மா ஆகியன மாவட்டத் திலுள்ள 24 ப.நோ.கூ. சங்கங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. மேற்படி பொருட்களுக்கான வழங்கற்கட்டளைகளை ப.நோ.கூ.சங்கங்கள் உடனடியாக மாவட்ட புனர்வாழ்வு,புனரமைப்பு செயலகத்தில் பெற்று பொருட்களை களஞ்சியங் களிலிருந்து பெற்று பங்கீட்டு அடிப்படையில் விநியோகத்தினை மேற்கொள்ளுமாறு அரசாங்க அதிபர் க.கணேஷ் அறியதந்துள்ளார்.

ஒரு கிலோ சீனி ரூபாய் 74.50, ஒரு கிலோ சிவப்பு நாட்டரிசி ரூபாய் 79.50, ஒரு கிலோ சம்பா அரிசி ரூபாய் 86.50, ஒருகிலோ கோதுமை மா ரூபாய் 72.00 ஆகவும் ப.நோ.கூ.சங்கங்களின் சில்லறை விற்பனை விலையாக நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது. மேற்படி விநியோக நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யுமாறு பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகியோருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப் பட்டுள்ளது எனவும் அரசாங்க அதிபர் அறிய தந்துள்ளார். (ச)

## இளைஞனைக் காணவில்லை

இளைஞர் ஒருவரைக் காணவில்லை என அவரது உறவினர்கள் யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறையிட்டுள்ளனர்.

4ஆம் கட்டை ஆனைக்கோட்டைச் சேர்ந்த மரியதாஸ் நிசாந்தன் (வயது 16) என்ற இளைஞனையே காணவில்லை என முறையிடப் பட்டுள்ளது.

கடந்த மாதம் 18ஆம் திகதியில் இருந்து அவரைக் காணவில்லை என முறைப்பாட்டில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச-7)

## பரீட்சைப் பெறுபேறுகள் எடுத்து வரப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் விமான மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன. இப் பெறுபேறுகளை இன்று காலை 9 மணிக்கு பாடசாலைகளில் பார்வை யிட முடியும் என யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ச)

## தொண்டர் ஆசிரியர்களின் போராட்டம் நிறுத்தம்

யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர்களினால் மேற்கொள்ளப்பட்டு வந்த கவன ஈர்ப்புப் போராட் டம் நேற்று முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் உறுதிமொழியை அடுத்து தொண்டர் ஆசிரியர்கள் போராட்டத்தைக் கைவிட்டனர். (ச)

## கலை நிகழ்வுகளும் பரிசில் வழங்கலும்

பன்னாலை திருவெம்பாவை கூட்டுப்பிரார்த்தனை சபையின் 69ஆவது ஆண்டு நிறைவு விழாவும் கணேசா அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் பரிசில் வழங்கல்களும் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

இன்று நடேஸ்வரப் பெருமானிற்கு அபிஷேகம் நடைபெற்று மாணிக்க வாசகப் பெருமானின் திருவுருவம் பன்னாலை வீதிகள் ஊடாக வலம் வந்து சிவப்பூதவராயப் பெருமான் ஆலயத்தில் எழுந்தருளி பூசைகள் நடைபெற்று சொற்பொழிவுகளும் பொதுக் கூட்டமும் நடைபெறும்.

நாளை பிற்பகல் 2 மணிக்கு கணேசா அறிநெறி பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் பரிசில் வழங்கல்களும் சிவப்பூதவராயர் ஆலய மடத்தில் தலைவர் நா. திருபாலசிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக இந்து சமய கலாசார அபிவிருத்தி உதவியாளர் த. பிரதீஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக சைவப்புலவர் ந.நித்தியதசீதரன், சித்தாந்தப் பண்டிதர் பிரம்ம ஸ்ரீ சர்மாஜி, பன்னாலைக்கிராம அலுவலர் ச.சிவகுமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ச)


## மனமார்ந்த நன்றிகள்



பட்டதாரி ஆசிரிய நியமனத்தில் அதிக கவனம் எடுத்து பெற்றுத்தந்த சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சரும் வடமாகாண விசேட செயலணிக்குழு தலைவருமான கௌரவ அமைச்சர்

**கே.என். டக்ளஸ் தேவானந்தா**

அவர்கட்கும், ஏனைய அமைப்பாளர்கட்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

(2098)

- பட்டதாரி ஆசிரியர்கள்

# இன்று ஒரு தகவல்

# உதவி

"எனக்கு ஒரு உதவி செய்ய வேண்டும்" என்று நம்மைப் பார்த்து ஒருவர் கேட்கிறார் என்று வைத்துக் கொள்வோம்.

உடனே நாம் அவரைப் பார்த்து "என்ன உதவி?" என்று கேட்போம். இது தான் சராசரி மனித –இயல்பு.

ஆனால் ஒருவர் உதவி என்று கேட்டவுடன் என்ன உதவி என்று கூடக் கேட்காமல் " சரி செய்கிறேன்" என்று ஒருவர் ஒப்புக் கொண்டால் அது மிகவும் அபூர்வமான காரியம்.

அந்தக் காலத்தில் ஒருவர் இருந்தார். கேட்கிறவர் நல்லவரா,கெட்டவரா, அதனால் தனக்கு நன்மையா, தீமையா என்று கூடப் பார்க்காமல் உதவி செய்கிறேன் என்று புறப்பட்டு விட்டார்.

அவர் யார் தெரியுமா?

அவர் தான் நளச் சக்கரவர்த்தி. அவர் மாதிரி நாமும் உதவி என்று கேட்டவர்களுக்கு உதவுவதற்கு தயாராக இருக்க வேண்டும் என்று கூறுகிறார் ஒரு ஆன்மீகப் பேச்சாளர்.

நள சரித்தை அவர் சொல்லிக்கொண்டிருந்தார். இந்திரன் ,அக்கினி,வருணன்,யமன் நால்வரும் நளனைப் பார்த்து, " எங்களுக்கு நீ உதவி செய்ய வேண்டும். எங்களுக்காக நீ தூது போக வேண்டும்" என்று கேட்டார்கள்.

நளன்,யாரிடமும் தூது போக வேண்டும்? எதற்காக போக வேண்டும் என்று கூடக் கேட்கவில்லை.

உடனே சரி என்று ஒப்புக்கொள்கிறான்.

அதன் பின் அவர்கள் விடயத்தைக் கூறினார்கள். நளனுக்கு பின்னர்தான் புரிந்தது.

எந்த தமயந்தியை அவன் காலித்தானோ எந்த தமயந்தியின் சுயம்வரத்துக்குப் போய்க் கொண்டிருக்கிறானோ அந்த தமயந்தியைப் பார்த்து,

"தங்களுக்காக அவளிடம் வாதாட வேண்டும், பேச வேண்டும். தங்களில் ஒருவரைத் திருமணம் செய்து கொள்ளுமாறு கேட்க வேண்டும்" என்று அவர்கள் நால்வரும் நளனிடம் கேட்கிறார்கள்.

இதைக் கேட்டதும், நளன் கொஞ்சம் கூட முகம் சுளிக்காமல் பதட்டப்படாமல் நேராக தமயந்தியிடம் போகிறான்.

இந்திரன் , அக்கினி, வருணன்,யமன் இவர்களின் சிறப்புகளையெல்லாம் சொல்கிறான். இவர்களில் ஒருவரைத் திருமணம் செய்து கொள்ளும் படி மன்றாடுகிறான்.

ஆனால் தமயந்தி இதற்குச் சம்மதிக்கவில்லை. சுயம்வரம் நடக்கிறது. அவள் நளனைத் தேர்ந்தெடுக்கிறாள்.

அந்த நால்வரும் நளனுக்கு வரங்களெல்லாம் கொடுக்கிறார்கள்.

என்று போகிறது கதை.

இதில் நாம் கவனிக்க வேண்டியது என்னவெனில், உதவி என்று கேட்டவுடன்என்ன உதவி என்று கேட்காமல் சரி செய்கிறேன் என்று சொன்னான் பாருங்கள். அதைக் கொஞ்சம் சிந்திக்க வேண்டும்.

செய்கிறேன் என்று ஒப்புக்கொண்ட பின் அது என்ன உதவி என்று தெரிந்தும் முகம் சுளிக்காமல் அதை செய்தானல்லவா, அதையும் சிந்திக்க வேண்டும்.

நம்ம ஆள் ஒருவன் நண்பனைத் தேடிப் போனான் "எனக்கு ஒரு உதவி" என்றான். "சரி சொல்" என்றான் அவன்.

"இப்பொழுது உன்னிடம் இரண்டு கார் இருந்தால் என்ன செய்வாய்?" என்றான்.

"உடனே அதில் ஒன்றை உன்னிடம் கொடுத்து விடுவேன்" என்றான் அவன்.

" உன்னிடம் இரண்டு பங்களா இருந்தால்?"

" உடனே அதில் ஒன்றை உன்னிடம் கொடுத்து விடுவேன் "என்றான்.

" உன்னிடம் இரண்டு பேனா இருந்தால்?"

"அதில் ஒருபேனாவை உன்னிடம் கொடுக்க மாட்டேன் என்றான்."

" ஏன்டா அப்பிடிச் சொல்கிறாய்?" என்றான்.

" ஏனென்றால், இப்பொழுது நிஜமாகவே என்னிடம் இரண்டு பேனா இருக்கிறது. அதனால் தான் அப்படி சொல்கிறேன்" என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வடக்கில் உளவளத்துறையை விரிவாக்க அமைச்சர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் உளவளத் துறை ஆலோசனைப் பணிகளைப் பரவலாக்கவும் பலம் பொருந்திய வகையில் மேற்கொள்வதற்கு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் கீழ் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் உளவளத்துறை ஆலோசனைப் பணிகளை வடமாகாணத்தில் மேற்கொள்ளப்படுகின்ற போது இங்குள்ள விசேடமான காரணிகளைக் கவனத்தில் கொண்டே முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ள அமைச்சர் குடாநாட்டில் மக்கள் தொடர்ந்தும் பல்வேறு வகையில் உளரீதியிலான பாதிப்புக்களுக்கு உட்பட்டிருப்பதால் இவர்களுக்கான உளவள ஆலோசனைப் பணிகள் மிகவும் பலம் பொருந்தியதாக இருக்க வேண்டும் என்பதையும் உணர்த்தியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை யாழ். குடாநாட்டில் பணியாற்றி வருகின்ற உளவளத் துறை துணையாளர்களைச் சந்தித்து அமைச்சர் மேற்படி பணிகளைக் காத்திரமாக மேற்கொள்வதற்கு அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தித் தருவதாகவும் மக்களின் தன்மையறிந்து உளரீதியான பாதிப்புக்களில் இருந்து அவர்களை முழுமையாக மீட்டு, நிம்மதியானதொரு வாழ்க்கையை மேற்கொள்வதற்கு ஏற்ப அவர்களைத் தயார் படுத்துவது உளவளத் துணையாளர்களது கடமையாகும் என்றும் இக்கடமையை சமூக உணர்வுடன் மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (ஓ)

## திருவாசகம் முற்றோதல்

(பருத்தித்துறை)

வதிரி பூவற்கரைப்பிள்ளையார் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது. (ஓ-52)

❖❖❖

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகை அம்மன் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருவாசக முற்றோதல் நிகழ்வு இடம் பெறவுள்ளது. (ஓ-52)

## இராசி பலன்

10.01.2009
(மார்கழி26, சனிக்கிழமை)
திருவாதிரை முன்னிரவு10.28மணிவரை
சதுர்த்தசி பிற்பகல் 12.36மணிவரை
இராகுகாலம்-9.33-11.03மணிவரை
சுபநேரம்-3.33-5.03 மணிவரை
பூரணை விரதம் உதயம் நடேசர் ஆர்த்திரா தரிசனம்

| | |
|---|---|
| மேடம் | போசன சுகம், நல்ல செய்தி, நண்பர்கள் உதவி, காரிய அனுகூலம். |
| இடபம் | முயற்சி தாமதம், பணவிரயம், ஆரோக்கியக் குறைவு, உணர்ச்சி வசப்படுதல். |
| மிதுனம் | நல்ல முயற்சி, திடீர் நன்மை, நண்பர்கள் சந்திப்பு, தெய்வ சிந்தை. |
| கடகம் | காரிய அலைச்சல், உறவினர் சந்திப்பு, பிரயாணம், சயன சுகக் குறைவு. |
| சிங்கம் | உறவினர் கலந்துரையாடல், எடுத்த காரியம் கைகூடும், நல்ல செய்தி, தொழில் வருமானம். |
| கன்னி | அதிகாரம், நல்ல செய்தி, நண்பர்கள் உதவி, கடின முயற்சி. |
| துலாம் | பிதாசிந்தை, எடுத்தகாரியம் தாமதமாகும், கட்டுப்பாடு, புதிய திட்டமிடல். |
| விருச்சிகம் | உஷ்ணவியாதி, அமைதிக் குறைவு, முயற்சி தாமதம், பிரயாண பயம். |
| தனுசு | நல்லசெய்தி, போசனசுகம், காரிய அனுகூலம், களஸ்திர நன்மை. |
| மகரம் | பெரியோர் சந்திப்பு, முயற்சிகை கூடும், ஆரோக்கியம், தொழில் விருத்தி. |
| கும்பம் | ரோகநிலை, காரிய தாமதம், வியாபார சிந்தை, பணக் குறைவு. |
| மீனம் | மனச்சஞ்சலம், காரிய தாமதம், புதிய விடயம், மாதாசுகம். |

வளவன்



இன்று ஈழத்து சிதம்பர சௌந்தராம்பிகை சுந்தரேஸ்வரப் பெருமான் திருவெம்பாவை 2009.01.10 தீர்த்தோற்சவம்

## திருவருள் மழைசொரிந்து தில்லைக்கூத்தன் தீர்த்தமாடுகிறான்

ஆதியொன்றும் இல்லாதான் அந்தமொன்றும் இல்லாதான்
ஆருத்திரா தரிசனம் தந்தே ஆர்த்தாடி அருள்கின்றான்
சோதி மயமானவன் ஈழ தொல்பதியில் ஆடுகின்றான்
சூழ் கொன்றை வேணியனாய் சுடரேந்தி ஆடுகின்றான்
இன்ப துன்ப மறியாதான் ஈழத்து சிதம்பரத்துள் ஆடுகிறான்
மன் பதைக்கு நல்ல தொரு வழிகாட்டி ஆடுகிறான்
காலனையும் தன் கலால் காயந்த பெருந்திறலான் ஆடுகிறான்
வேலவனை விழிவழியே வியனுலகுக் கருனியவன் ஆடுகிறான்
மாலோடயன் காண மலையாய் விளங்கியவன் ஆடுகிறான்
சேவோடும் கண்ணிதனைத் திருவுருவில் தாங்கியவன் ஆடுகிறான்
பாலோடு கரும்பிளநீர் தேன் கலந்த நெய்பூசி ஆடுகிறான்
பக்தர் நலம் காத்தருளி பாவவினை போக்க ஆடுகிறான்

மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்

(1968)

## யாழ். குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரங்கள்

| மரக்கறி வகைகள் | யாழ்ப்பாணம் | திருநெல்வேலி |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 1000 | 800 |
| தக்காளி | 600 | 600 |
| அவரை | 120 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 75 | 50 |
| கோவா | 120 | 120 |
| கரட் | 140 | 100 |
| பூசணி | 80 | 80 |
| புடோல் | 120 | 100 |
| வாழைக்காய் | 140 | 110 |
| சின்ன வெங்காயம் | 120 | 90 |
| பெரிய வெங்காயம் | 200 | 160 |
| பாகற்காய் | 200 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 70 |
| கரணைக் கிழங்கு | 40 | 25 |
| பயிற்றங்காய் | 200 | 200 |
| லீக்ஸ் | 200 | 200 |
| கீரை - 1 பிடி | 30 | 25 |
| போஞ்சி | 350 | 250 |
| தேசிக்காய் | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 25 |

(7)



சமூக சேவைக்கான உயர்விருதைப் பெற்ற ஸ்ரீலங்கா நூலக சேவை இளைப்பாறிய உள்ளூராட்சி நூலகர் ஏ. என். எஸ். திருட்செல்வத்திற்கு பருத்தித்துறை பிரதேச கலாச்சார பேரவையின் முத்தமிழ் விழாவில் யாழ். அரச அதிபர் கே. கணேஷ் விருது மற்றும் சான்றிதழ்களை வழங்குவதையும் மேடையில் யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# சகிப்புத் தன்மையும் சுயவிமர்சன சுதந்திரமும் இந்து சமயத்தின் சிறப்பை வெளிப்படுத்துகின்றன

## யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி உரை



**சகிப்புத் தன்மையும் சுயவிமர்சன சுதந்திரமும் இந்து சமயத்தின் தனிச் சிறப்பை வெளிப்படுத்துகின்றன என யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா தெரிவித்துள்ளார். நேற்று நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள இந்து மாமன்ற கட்டிட திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாவலர் போன்ற மறுமலர்ச்சியாளர்கள் இந்து சமய உணர்வை செழிக்க செய்யப் போராடினார்கள். கிறிஸ்தவ சமயத்தின் மத மாற்றத்திற்கான எதிர்ப்பை உருவாக்குவதில் தற்காப்பு உத்தியைக் கையாண்டனர்.

ஆனால், " முழு உலகுக்கும் ஒளியாய் இருக்கும் இந்து சமயத்தைச் சேர்ந்தவன் என்பதனால் பூரிப்படைகிறேன்" என பெருமையுடன் சிக்காக்கோவில் சிலாகித்த சுவாமி விவேகானந்தர், இந்து சமயத்தை தனித்துவப்படுத்திக் காட்டுவன, அதன் சகிப்புத்தன்மையும், சுய விமர்சன சுதந்திரமும் ஆகும் என்ற இவரின் அணுகுமுறை வித்தியாசமானது. அனைத்து மதங்களும் சமமானவைகளே என்பதை வலியுறுத்தினார். இதனால் இந்து மதம் பிற மதங்களுக்குத் தாழ்வானது அன்று என்பது விளக்கமுற்றது. அதேசமயத்தில் இந்து சமயம் உலகம் தழுவியது என்பதும் ஐயத்திற்கிடமின்றி தெளிவாக்கப்பட்டது.

மதங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் எதுவித ஐயப்பாட்டிற்கும் இடமில்லை. ஒவ்வொரு மதத்தவனும் தனது மதத்தை பாதுகாக்க வேண்டும் என்ற கடப்பாடு இருக்கிறது. எந்த மதத்தையும் பின்பற்றவோ வழிபடவோ எவருக்கும் சுதந்திரம் உண்டு. எல்லா மதங்களையும் அங்கீகரிக்கின்ற மதிக்கின்ற தன்மை எல்லா மதங்களைச் சார்ந்தவர்களுக்கும் அவசியம். ஆனால் ஒரு மதத்தின் தனித்துவங்களை விட்டுக் கொடுக்கும் அளவிற்கு பெருந்தன்மை அவசியமற்றது. தத்தமது மதங்களைப் பின்பற்றி பாதுகாக்கும் அதே வேளையில் மற்ற மதங்களைத் தாழ்த்தாமல் கண்டிக்காமல் அந்த மதத்தவர்களுக்கு ஊறு விளைவிக்காமல் இருத்தல் வேண்டும்.

எல்லா மதங்களுமே அன்பையும், பாசத்தையும், பண்பையுமே போதிக்கின்றன. அத்துடன் நல்லவற்றைச் செய்யவும் தீயவற்றை தவிர்க்கவும் மதமானது ஒரு வழிகாட்டியாக ஒளி விளக்காக உதவுகின்றது.

மனிதனை மனிதத் தன்மையோடு கூடிய மனிதனாக மாற்றுவது கல்வி என்று மனித நாகரிக வரலாறு தொடங்கிய காலத்திலிருந்து சிந்திக்கப்பட்டு வந்தது. கல்வியின் ஆரம்பம் சமயக் கல்வியாக ஒழுக்கக் கல்வியாக அறநெறிக் கல்வியாக இருந்தமையை கல்வி வரலாறு குறிப்பிடுகின்றது. கல்வியை வழங்கி வந்த ஆசான்கள் யாவரும் சமய அறிஞர்கள், அருளாளர்கள், சமயச் சான்றோர்களாகவே விளங்கினார்கள்.

"மனிதனில் ஆழ்ந்து கிடக்கும் தெய்வீகத்தை வெளிப்படுத்துவது சமயம்" என்று சமயத்திற்கும், "மனிதனில் ஆழ்ந்து கிடக்கும் பரிபூரணத்துவத்தை வெளிப்படுத்துவது கல்வி" என்று கல்விக்கும் வரைவிலக்கணம் தருகிறார் சுவாமி விவேகானந்தர். இதில் இருந்து சமயக் கல்வி மனிதர்களுக்கு எத்துணை அவசியம் என்பது புலப்படுகிறது.

மனிதனில் உலகியல் வாழ்க்கையை ஆன்மீகம், தெய்வீகம், பரிபூரணம் நிறைந்ததாக நெறிப்படுத்துவது சமயமும் கல்வியும் ஆகும். உலகில் வாழ்வாங்கு வாழ்தல், நல்ல வண்ணம் வாழ்தல், மனிதத் தன்மைகளோடு வாழ்தல் என்பன உலகியல் உடன் ஆன்மீகமும் கலக்கும் போதே எய்தப்படுகின்றன.

மனிதர்கள் ஆன்மீக ஒருமைப்பாட்டினை உணர்ந்து, ஒழுகுவதற்கும் உலகை ஒன்றாகக் காணும் சர்வதேசியத்தை அனுசரிப்பதற்கும் அவர்களுக்கு உறுதுணையாய் அமைந்த தூய நற்கல்வி அண்மைக்காலங்களில் இருந்து உலகியல் சார்ந்த கல்விக்கு இடம் அளித்து ஒதுங்கிக் கொண்டது. தற்கால கல்வி முறையில் ஆன்மீகம், மானுடம், விழுமியம் என்பன நழுவவிடப்பட்டு வருவதையும், வேறு பல உலகியல் நோக்கங்கள் இடம் பெற்று இருப்பதையும் அவதானிக்க முடிகிறது. பாடசாலையில் வழங்கப்படும் சமயக் கல்வியில் கூட இதே நிலைமை காணப்படுகின்றது.

மானுட நேயம், கடமை, கட்டுப்பாடு, கண்ணியம், இறைநம்பிக்கை, பெற்றோர், பெரியோர், மூத்தோர் ஆகியோரை மதித்தல், பிறர் நலம் பேணுதல், உண்மை, நீதி, அமைதி, நல்லொழுக்கம், அகிம்சை என்பவற்றை வாழ்க்கையில் அனுசரித்தல், சமூக நீதி, சட்டம், ஒழுங்கு ஆகியவற்றைக்கு கட்டுப்படுதல், ஊழல்களைத் தடுத்தல், சூழல் மாசடையாது பாதுகாத்தல் ஆகியன சமுதாயத்தில் அருகிக்கொண்டே வருகின்றன. அநீதிகள், ஊழல்கள், துர்நடத்தைகள், கொடுமைகள் என்பன பெருகி வருகின்றன.

மனித குலம் அதற்கே உரித்தான பண்பாடு, ஆத்மீக விழுமியங்களை இழந்து கொண்டு வருதலை இந்நிலைகள் உணர்த்துகின்றன. தற்கால கல்வி முறை இதனை ஊக்கிவிக்கின்றதோ என எண்ணத் தோன்றுகின்றது.

நம் வாழும் யுகம் விஞ்ஞான, தொழில் நுட்ப அபிவிருத்தியில் அதிதீவிர வளர்ச்சி கண்டுள்ள காலப்பகுதியாகும். கல்வியே அதற்குக் காரணம். இதன் பயனாக மக்களின் பொருளாதாரம், வாழ்க்கை வசதிகள், ஆடம்பரங்கள் என்பன செழித்து ஓங்குகின்றன. நாகரிகம் வளர்ந்துள்ளது. ஆனால் "நயத்தக்க" நாகரிகமாக அது அமையவில்லை. அதனால் மக்கள் வாழ்க்கையில் அமைதி, மகிழ்ச்சி, சமாதானம் என்பன காணப்படுதல் அரிதாகி விட்டது.

மனித குலம் இன்று எதிர்நோக்கும் பெரும் பிரச்சினை என்னவென்றால், விஞ்ஞான தொழில் நுட்பத்துறைகளில் அதிதீவிர வளர்ச்சிக்கு இணையாக மானுடப் பண்புகள், விழுமியங்கள் உள்ளிட்ட ஆன்மீகத் துறை விருத்தி பெறாமையாகும்.

மனித வாழ்க்கைத் தரத்தின் முன்னேற்றம், உலகியல் தேவைகளைப் பூர்த்தி செய்தல், ஆன்மீகத் தேவைகளை நிறைவு செய்தல் ஆகிய இரண்டினதும் சமவளர்ச்சியின் அடிப்படையில் கணிக்கப்பட வேண்டும். இன்று அவ்வாறு செய்யப்படுவதில்லை. கல்வி பக்கச் சார்பாகி வருவதையே இது காட்டுகிறது.

குடும்பக் கடமைகள், சமூகக் கடமைகள், தொழிற் கடமைகள் முதலிய மனிதக் கடமைகளில் ஆன்மீக உணர்வுகள் வெளிப்படுத்தப்படுதல் அவசியம். அப்போது தான் அவை சிறப்பாக ஆற்றப்படும்.

விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் நிச்சயம் தேவை. ஆனால் அவற்றுடன் ஆன்மீகம் இணையும் போதுதான் விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் ஆக்கத்திற்கு பயன் தரும். அதேவேளை அழிவிற்குத் துணை போகாமலும் இருக்கும். உலகியலும் ஆன்மீகமும் இணைய வேண்டும். இந்நிலையை ஏற்படுத்துவதற்கு தூய கல்வியே உறுதுணையாகும்.

ஆன்மீகம், மறு உலகமயப்படுத்தப்பட்டிருப்பதால் அதைப்புரிந்து கொள்வதில் கஷ்டப்பட வேண்டியுள்ளது.

சமயவாதிகளே அதற்குப் பொறுப்பேற்க வேண்டும். உண்மையில், ஆன்மீகம் இவ்வுலக மயப்படுத்தப்படல் வேண்டும். ஆன்மீகம் சமூகவயமாதல் இன்றைய அவசியத் தேவையாக உள்ளது.

கல்விமான்கள் ,சமய சான்றோர்கள் ஆகிய இரு தரப்பினரும் இதனைக் கருத்திற் கெடுத்து சமயம் சம்பந்தப்பட்ட பாடத்திட்டத்தை கற்பித்தல், கற்றல் அணுகுமுறைகளை மதிப்பீட்டு முறைகளை தயாரிக்க வேண்டும். அத்தோடு பாடசாலைக் கலைத்திட்டம் முழுவதிலும் அதனோடு கொள்ளப்படும் உறவிலும், உணர்விலும், செயற்பாடுகளிலும் ஆன்மீகம் ஊடுருவி செறிந்திருக்க வேண்டும். ஆன்மீகம், மறு உலகத்திற்காயது என்பதுடன் மட்டும் நிறுத்தி விடாது, இவ்வுலக வாழ்வின் செழுமைக்கும், சீருக்கும் தேவையானது என்ற உணர்வு ஏற்படும் பட்சத்திலேயே கல்வி கருத்துள்ளதாக அமையும். அதன் துணையுடன் அமைகின்ற வாழ்வும் சிறப்புள்ளதாகும்.

சமயம் இன்று தத்துவ நிலையிலேயே காணப்படுகின்றது. அது இன்று நடைமுறை வாழ்வில் இல்லை என்பது பெரும் குறைபாடாக உள்ளது. வாழும் சமயம் என்ற பெயருடன் திகழ வேண்டும் என்றால் அச்சமய தத்துவத்தில் வாழ்ந்தால் போதாது , மக்களின் நடைமுறை வாழ்விலும் வாழ வேண்டியது மிகவும் அவசியம்.

வெறும் சாஸ்திர அறிவினால் மட்டும் என்ன பயன் ஏற்படும்? உண்மையிலேயே ஆன்மீக வாழ்க்கையில் முன்னேற்றத்தைப் பெற வேண்டுமானால் சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட உண்மைகளை நடைமுறை வாழ்க்கையில் அனுபவத்திற்கு கொண்டு வரவேண்டும்.

மனிதன் ஆன்மீக வளம் நிரம்பப் பெற்றவன். ஆன்மீகச் செல்வமுடைமைதான் மனிதனை வேறு உயிரினங்களில் இருந்த வேறுபடுத்திக் காட்டுவதோடு,அவனை உயர்திணையிலும்வைத்துச் சிறப்பிக்கிறது.

ஆன்மீக வளம் மனிதனுள் ஆழ்ந்து புதைந்து கிடக்கும் வரை மனிதனின் வாழ்க்கைக்குப் பயன்படப்போவதில்லை. ஆன்மீக விரயமே ஏற்படும். இன்று காணப்படுவது ஆன் மீக விரயமே. அதன் விளைவு தான் இன்றைய மனித துன்பங்களும் துயர்களும் ஆகும்.ஆன்மீகம் பயன் உள்ளதாக அமைய வேண்டுமாகில், மனித வாழ்வில் அது வெளிபாடாதல் வேண்டும் என்று தெரிவித்தார்.








தீவக லயன்ஸ் கழகத்தின் சேவைத்திட்டம் அண்மையில் புங்குடுதீவு சர்வவோதய மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் லயன்ஸ் கழகத்தலைவர் லயன் ஆ.சபாநாதன் பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்கள் வழங்குவதையும், அருகில் லயன் ஆ.சாந்தலிங்கம் நிற்பதையும், தலைமைத்துவ பயிற்சி அபிவிருத்தி மாவட்ட இணைப்பாளர் லயன் எஸ். ரவீந்திரா இளைஞர், யுவதிகளுக்கான ஆளுமை விருத்திக் கருத்தரங்கை நடத் துவதையும், வீட்டுத் தோட்ட செய்கைக்கான உள்ளீடுகளை லயன்ஸ் கழகத் தலைவர் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# இலங்கையில் தமிழர் 36

## ஆதி இரும்புக் காலம்
### மத்திய இலங்கை

*அனுராதபுரம்*

இலங்கையிலுள்ள ஆதி இரும்புக் காலத் தொல்லியல் தலங்களுள் மிகவும் முக்கியத்துவம் பெற்றுள்ள தலம் பிற்காலத்தில் ஒரு பெருநகராக வளர்ந்த அனுராதபுரம் ஆகும். வடமேற்கில் உள்ள பொம்பரிப்புத் தலத்துக்கும் வடகிழக்கில் உள்ள யான் ஓயா அடக்கக் குழுமத்துக்கும் இடையில் மையமான தலமாக இது அமைவது கவனிக்கத்தக்கது. ஏனைய ஆதி இரும்புக் காலத் தலங்களை விடக் கூடுதலாக ஆய்வு செய்யப்பட்ட தலமாகவும் மிகப் பரந்த இடத்தை உள்ளடக்கிய தலமாகவும் அனுராதபுரம் சிறப்புப் பெறுகின்றது.

இங்கு ஆதி இரும்புக் காலத்துச் சவ அடக்கங்கள் இதுவரை காணப்படாவிட்டாலும், அகழ்வு செய்யப்பட்ட மிகப் பழைய மட்டத்திலே கரும்-செம் மட்பாண்ட வகைகள் பெறப்பட்டுள்ளன. இதனால், ஆதி இரும்புக் காலத்துப் பண்பாட்டின் பரம்பலுடன் அனுராதபுரத்தின் குடியிருப்புத் தொடங்கியது என ஊகிக்க இடமுண்டு.

பொம்பரிப்புக்கும் அனுராதபுரத்துக்கும் இடையில் ஆதி இரும்புக்காலத்தில் தொடர்புகள் இருந்திருக்கவேண்டும் என்ற கருத்தை மறுப்பது கடினம். தமிழ்நாட்டின் தென் பகுதியிலிருந்து (ஆதிச்சநல்லூர்) போன்ற இடங்கள் வழியாக) ஆதி இரும்புக் காலத்துப் பண்பாடு இல்கையின் வடமேற்குப் பகுதிக்கு (பொம்பரிப்புப் போன்ற இடங்களுக்கு) அறிமுகப்படுத்தப்பட்ட பின், உள் நாட்டுக்கு அப்பண்பாடு பரவி அனுராதபுரப் பகுதியை அடைந்திருக்கும். அதேவேளை, தமிழ் நாட்டின் கிழக்குக் கரை வழியாக இலங்கையின் வடகிழக்குக் கரைக்கு (முல்லைத் தீவு, திருகோணமலை மாவட்டங்களுக்கு) வந்து சேர்ந்த ஆதி இரும்புக் காலப் பண்பாடு யான் ஓயா போன்ற நதிகளின் ஓரமாக உள் நாட்டுக்குப் பரவி அனுராதபுரப் பகுதியையும் அடைந்திருக்கும்.

பொம்பரிப்பு ஆதி இரும்புக் காலத்தில் ஒரு முக்கிய குடியிருப்பாக இருந்தது. ஏறக்குறைய 8ஆயிரம் சவ அடக்கங்கள் இங்கு இருப் பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவற்றிலே ஏறத்தாழ 12ஆயிரம் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளன எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய ஓர் இடத்தில் அல்லது அதன் சூழலில் ஒரு நகர மையம் இருந்திருக்கக் கூடும். பாளி வரலாற்று நூல்களில் இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன் இருந்த ஒரு முக்கிய நகரமாகக் குறிப்பிடப்படும் தம்பபண்ணி வடமேற்குக் கரையில் இருந்தது எனக் கொள்ள இடமுண்டு. இது பொம்பரிப்பின் சுற்றாடலில் இருந்திருக்கலாம். இந்நகரம் வீழ்ச்சியுற்ற காலத்தில் உள்நாட்டில் இன்னொரு முக்கிய நகரமாக அனுராதபுரம் எழுச்சி பெற்றிருக்கலாம்.

வடமேற்கு இலங்கையில் இருந்து மக்கள் பெருக்கம் ஏற்படக் குடியிருப்புகள் அனுராதபுரப் பகுதியை நோக்கி உள்நாட்டுக்குப் பரவி வளர்ந்திருக்க வேண்டும் என்றும், இத்தகைய பரம்பலின் விளைவாக வட இலங்கை முழுவதும் ஒரு பொதுப்பட்ட தொழில் நுட்பத்தையும் பண்பாட்டையும் கொண்ட பிரதேசமாக மாறியது என்றும் பேராசிரியர் ஸெனெவிரத்ன கருத்துத் தெரிவித்துள்ளார். அனுராதபுரப் பகுதியின் மண் மற்றும் நில அமைப்பு ஆகியவை மக்கள் அங்கு சென்று குடியிருப்புகளை அமைப்பதற்கான கவர்ச்சியைக் கொடுத்த காரணிகளாக அவர் விளக்கியுள்ளார்.

மக்கள் பெருக்கத்தினால் வடமேற்குக் கரையிலிருந்து உள் நாடு நோக்கி குடியிருப்புகள் பரந்து அனுராதபுரத்தை அடைந்தன என்று கருதுவதைக் காட்டிலும், வடமேற்குக் கரைக்குத் தமிழ் நாட்டிலிருந்து பரவிய புதிய ஆதி இரும்புக் காலப் பண்பாடு அவ்விடத்தில் நன்கு வேரூன்றிய பின், உள்ளே பரவத் தொடங்கியதன் விளைவே அனுராதபுரத்தில் நாம் காணும் ஆதி இரும்புக் காலக் குடியிருப்பு என்று கொள்வது பொருத்தமாகத் தோன்றுகிறது.

வடமேற்குக் கரையில் ஆதி இரும்புக் காலப் பண்பாடு பரவிய போது அங்கு தம்பபண்ணியை மையமாகக் கொண்ட குறுநில அரசு தோன்றியது என்ற கொள்வதானால், உள் நாட்டில் இப் பண்பாடு புரவியபோது வேறும் குறுநில அரசுகள் தோன்றின எனலாம்.

அவற்றுள் ஒன்று அனுராதபுரப் பகுதியில் தோன்றியிருக்க வேண்டும். அதனை அனுராதகாம என்ற பெயரால் பழைய பாளி வரலாற்றேடுகள் குறிப்பிடுவதைக் காணலாம். தமிழ்நாட்டுக் கரையில் மதிரை (பின்னர் தென் மதுரை) என்னும் பெயருடன் தோன்றிய பாண்டியக் குறுநில அரசின் மையம் பின்னர் உள்நாட்டுப் பகுதியில் பதிய மையமாக மதிரை என்ற பெயருடன் எழுச்சி பெற்றது போன்று தம்பபண்ணியில் ஆதிக்கம் பெற்றிருந்தோர் தங்கள் அதிகார பீடத்தை ஏதோ ஒரு காரணத்துக்காக அனுராதகாமத்துக்கு மாற்றியிருக்கலாம். அல்லது தம்பபண்ணிக் குறுநில அரசைத் தோற்கடித்து ஒரு வலுப் பெற்ற குறுநில அரசாக அனுராதகாமத்துக் குறுநில அரசு எழுச்சிபெற்றிருக்கலாம். இதன்விளைவாகத் தம்பபண்ணி அழிவுற, அனுராதகாமம் மிக வலிமை வாய்ந்த குறுநில அரசாக மேலோங்கி வளரத் தொடங்கியிருக்கலாம்.

இதுவரை நடத்தப்பட்ட அகழ்வாய்வுகள் மூலமாக அநுராதபுரத்தில் பொ. ஆ.மு. 900 அளவில் ஆதி இரும்புக்கால பண்பாடு பரவியிருந்ததை அறிய முடிகின்றது. வடமேற்குக் கரையில் ஆதி இரும்புக் காலப் பண்பாடு பரவிய முக்கிய இடங்களாகிய பொம்பரிப்புப் போன்ற இடங்கள் அனுராதபுரத்திலிருந்து ஏறக்குறைய 70 கிலோமீற்றர் தூரத்தில் இருப்பதைக் கருத்திற் கொண்டால் அதிக காலதாமதமின்றி அனுராதபுர பகுதிக்கு இப்புதிய பண்பாடு பரவியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

பேராசிரியர்
**கா. இந்திரபாலா**

அவ்வாறு புதிய பண்பாடு பரவியபோது அனுராதபுரப் பகுதியில் ஒரு குறுநில அரசு தோன்றியிருக்கும். அங்கு கிடைத்துள்ள தொல்லியல் சான்றுகளைக் கொண்டு ஸெனெவிரத்ன கூறுவதாவது, இப்பகுதியில் முன்பிருந்த இடைக்கற்காலத்து மக்களுக் கும் புதிய பண்பாட்டைக் கொண்டு வந்த, இரும் பைப் பயன்படுத்திய பெருங்கற் பண்பாட்டு மக்க ளுக்கும் இடையில் கலப்பு ஏற்பட்டிருக்கலாம்..(தொடரும்)




சாவகச்சேரி நகரசபை பொதுநூலகத்தினால் நடத்தப்பட்ட தேசிய வாசிப்பு மாத இறுதிநாள் நிகழ்வில் வெளியிடப்பட்ட 'நகரணி'சஞ்சிகையை யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் வெளியிட்டு வைக்க முதற்பிரதியை வி.எம்.கே. நகைமாளிகை பிரதிநிதி பெற்றுக்கொள்வதையும், சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க.கணேசலிங்கம் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதையும், மாணவர்களது கலைநிகழ்வையும் படங்களில் காணலாம்.

# இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகால தமிழ்பத்திரிகைகளும் - யாழ்ப்பாணமும் 11

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியும், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பமும், தமிழ் இலக்கிய வரலாற்றில் வட இலங்கையரின் ஆதிக்கம் உச்சநிலையில் இருந்த காலம் என்பதை வலியுறுத்துவதற்குப் போதிய சான்றுகள், அக்காலத்து இலக்கியப் பதிப்புக்களிலும், பத்திரிகை வெளியீடுகளிலும் உண்டெனலாம்.

மேற்குறிப்பிட்ட உச்சநிலை பின்னர் திடீரெனத் தளர்வடைந்து சென்றமை வியப்பிற்குரியதாகவும் ஆராய்வுக்கு உரியதாகவும் உள்ளது.

பத்திரிகைகளின் வெளியீட்டினையும், நூல்களின் வெளியீட்டினையும் எடுத்துக் கொண்டால், அவைகளின் தொடர்ச்சியான வெளியீடு என்பது பின்வரும் காரணிகளால் தீர்மானிக்கப்படலாம்.

- வெளியீட்டாளர்களின் பொருளாதாரப் பின்னணி
- சமூகத்தில் மக்கள் மத்தியில் காணப்படும் வாசிப்புப் பழக்கத்தின் அளவு
- சமூகத்தின் அக்கறையுடைய சுதந்திர சிந்தனையுடைய புலமைத்துவம் மிக்கவர்களின் ஆர்வமும் உருவாக்கமும்
- அச்சிடுவதற்கு வேண்டிய பொருட்களின் நிரம்பல்.

இந்த நான்கில் ஏதாவதொன்றில் குறைபாடு உருவாகுமேயானால், பத்திரிகைகளினதும், நூல்களினதும் வெளியீடுகள் தேயும் நிலைதான் உருவாகும்.

இவற்றுள் மூன்றாவதை எடுத்துக்கொண்டால், புலமைத்துவம் உடையவர்களாக இருந்து வந்தவர்களின் இறப்பும், கற்றோர்கள் அமைப்புக்களுள் உள்வாங்கப்பட்டமையும், இதனைப் பெரிதும் பாதித்திருக்கும். உதாரணமாக சைவ வித்தியா விருத்திச் சங்கம் என்பவைகளின் உருவாக்கமும் உள்வாங்கலும்.

வெளியீட்டாளர்களின் பொருளாதாரப் பின்னணியை எடுத்துக்கொண்டால், 1900-1915 ஆம் ஆண்டுகளின் பத்திரிகைகள், பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்நோக்கி வந்ததையே காணமுடிகிறது.

வாசிப்பு விருப்புத் தன்மையைப் பொறுத்தமட்டில், யாழ்ப்பாணத்தில் 1900 ஆம் ஆண்டுகளில் பல வாசிப்பு சாலைகள் உருவாக்கப்பட்டு, அவை செயற்பட்டதை அறியமுடிகிறது. மேலும், ''ஈழகேசரி' பத்திரிகைக்கு பெருமெண்ணிக்கையிலான வாசகர்கள் இருந்தமையையும் அவதானிக்க முடிகிறது.

அச்சிடுகைக்கான பொருட்களின் கிடைக்கும் தன்மையை பொறுத்தமட்டில் 1ஆம், உலக யுத்த காலத்தில், இப்பிரச்சினை பெரும்ளவில் உருவாகியிருக்க முடியும். சிங்கள-முஸ்லிம் கலகத்தின் பின்னர் அரசாங்கம் பிரகடனப்படுத்திய கட்டுப்பாடுகள் இந்த மாற்றத்திற்குக் காரணமாக அமைந்திருக்கவும் முடியும்.

ஆயினும் 1917 ஆம் ஆண்டிற்கு முன்னர் காலனித்துவ ஆதிக்கத்திற்கு எதிரான கருத்துக்கள் எதனையும் பத்திரிகைகளில் காண முடியவில்லை. மாறாக காலனித்துவ ஆட்சியாளர்களை மரியாதையுடனும் நன்றியுடனும் மதிப்பளிக்கும் வகையிலான செய்திகளும், குறிப்புகளும் உள்ளன.

இவைகளைப் பார்க்கும்போது, யாழ்.குடாநாட்டில் 1920 களின் பின்னர், பத்திரிகைகள் பல நிரந்தரமாக மறைந்தமைக்கு, பத்திரிகை வெளியீட்டாளர்கள் எதிர்நோக்கிய பொருளாதாரப் பிரசினைகளும், தம்மை ஒரு வித அமைப்பு முறைமைக்குள் உள்ளாக்கிக்கொண்ட குட்டி பூர்சுவாசிகளின் கைக்கு பத்திரிகை வெளியிடுகை முழுமையாக மாறியதைத்தான் அவதானிக்க முடிகிறது.

**திருமதி சோ. கிருஷ்ணகுமார்**
சிரேஷ்ட விரிவுரையாளர், வரலாற்றுத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

1930 ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட கால பத்திரிகைகளை ஆராய்பவர்கள் இதுபற்றி ஆராய்ந்து, சரியாக அறிய வேண்டியுள்ளது. இது 1930 ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட காலத்தில் எமது யாழ்ப்பாணச் சமூகம் எப்படியான வார்ப்பு அச்சினுள் (mould) இடப்பட்டது என்பதை அறிவதற்கும் உதவுவதாக அமையும்.

1ம் பக்கத் தொடர்ச்சி..

# கொமர்ஷல் வங்கியே! உலகின் உ
# இணைக்கப்பட்டுள்ள முதல

நிதியியல் துறையில் நிதி உறுதிப்பாட்டை அளவிடும் காரணியான படி ஒன்று மூலதனத்தின் உறுதியான அடித்தளம், ஸ்திரத்தன்மை, மூலதன வங்கி தெரிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான உலகின் தலைசிறந்த வங்கி தரப்படுத்தல

உலகின் நிதித்துறை சமூகம் உலகில் உயர் ஸ்தான வங்கி தரப்படுத்தல் பட்டியலை கூர்ந்து அவதானித்த வண்ணம் இருக்கின்றது. இ

இவ்வாறான தரப்படுத்தல் எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்ததொரு உறுதிப்பாட்டினை மீள வலியுறுத்தும் அதேசமயத்தில், இவ்விருது

## இரத்தம் செலுத்தாமல் இதய அறுவைச் சிகிச்சை

### மருத்துவர்கள் சாதனை

(சென்னை)

இரத்தம் செலுத்தாமல் 75 வயது முதியவருக்கு இதய வால்வு - இதய பை- பாஸ் அறுவை சிகிச்சை செய்து சென்னை பில்ராத் மருத்துவமனை டாக்டர்கள் சாதனை புரிந்துள்ளனர். இதுதொடர்பாக மருத்துவமனையின் தலைமை இதய அறுவை சிகிச்சை நிபுணர் எஸ்.தியாகராஜமூர்த்தி, இதய மருத்துவ நிபுணர் கே.தாமோதரன், மயக்க மருத்துவ நிபுணர்கள் நெடுமாறன், மகாதேவன் ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதா வது,

“சென்னையைச் சேர்ந்த திருமலாச்சாரி கடந்த ஒன்றரை ஆண்டாக இதய நோய் காரணமாக கஷ்டப்பட்டு வந்தார். அவருக்கு இதய அயோட்டிக் வால்வு, உடல் முழுவதுக்கும் சுத்தமான இரத்தத்தை எடுத்துச் செல்லும் பெரிய இரத்தக் குழாயில் (மகாதமனி) அடைப்பு ஆகிய பிரச்சினைகள் இருந்தன.

கிறிஸ்தவ சமூகத்தின் ஒரு பிரிவைச் சேர்ந்த (ஜஹோவா விட்னஸ்) அவர், தனது இரத்தத்தைச் சேமித்து வைத்தோ அல்லது பிறருடைய இரத்தத்தைச் செலுத்தியோ இதய அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள விரும்பவில்லை.

இதையடுத்து இரத்தம் செலுத்தாமல் அவரது இதயப் பிரச்சினையைச் சரி செய்வது குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

கடந்த டிசம்பர் 19 ஆம் திகதி அவருக்கு இதய அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது.

ஒரு மாதத்துக்கு வாரத்துக்கு ஒரு முறை இரத்த சிவப்பணுக்களை அதிகரிக்கும் ‘எரித்ரோபுரோட்டீன்’ ஊசி போடப்பட்டது. இதன் காரணமாக அவரது இரத்தத்தில் ஹீமோகுளோபின் அளவு 12.6 கிராமாக உயர்ந்தது.

இதயம் துடித்துக் கொண்டிருக்கும்போது இதய பை - பாஸ் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. செயற்கை இதய நுரையீரல் இயந்திரத்தின் உதவியுடன். புதிய வால்வு பொருத்தப்பட்டது. இரத்த இழப்பு இல்லாமல் இரத்தம் செலுத்தாமல் இரண்டு அறுவை சிகிச்சைகளும் ஒரே நேரத்தில் நான்கு மணி நேரம் செய்யப்பட்டன.

அறுவை சிகிச்சை முடிந்த இரண்டு நாளில் திருமலாச்சாரி நடக்கத் தொடங்கி விட்டார். இதய சிகிச்சை முடிந்து கடந்த 26 ஆம் திகதி அவர் வீடு திரும்பினார்” என்று அவர்கள் தெரிவித்தனர். (ஓ-6)

## இந்திய கடல் எல்லையில் மீன்பிடியில் ஈடுபட்ட இலங்கை மீனவர்கள் கைது

(இராமநாதபுரம்)

இந்திய கடல் எல்லையில் மீன் பிடித்த இலங்கை மீனவர்கள் 15 பேரை இந்திய கடலோரக் காவல் படையினர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைது செய்தனர்.

அவர்கள் வந்த இரு படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

இலங்கை தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த 15 மீனவர்கள் இந்திய கடல் எல்லையில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அந்த வழியாக இந்திய கடலோரக் காவல் படையினர் ஹோவர் கிராப்ட் கப்பலில் ரோந்து சென்ற போது அவர்களைக் கைதுசெய்து மண்டபம் கடலோரக் காவல்படை அலுவலகத்துக்குக் கொண்டு வந்தனர்.

அவர்கள் வந்த இரு படகுகளையும், அதில் இருந்த என்ஜின்களையும் பறிமுதல் செய்தனர். அங்கு கியூ பிரிவு பொலிஸாரும் இலங்கை மீனவர்களிடம் விசாரணை மேற்கொண்டனர். கைது செய்யப்பட்ட 15 பேரும் மண்டபம் காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். (ஓ-6)

## ராகுல் பிரதமராக வரும் காலம் வெகுதொலைவில் இல்லை

### பிரணாப் முகர்ஜி தெரிவிப்பு

(சென்னை)

ராகுல் காந்தி பிரதமராக வரும் காலம் வெகு தொலைவில் இல்லை. என்று வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார். வெளிநாடு வாழ் இந்தியர் மாநாட்டில் “வலுப்பெற்று வரும் இந்தியா” என்ற தலைப்பில் நடைபெற்ற விவாதத்திற்குப் பின்னர் நடந்த கேள்வி - பதில் நேரத்தில், வெளிநாடு வாழ் இந்தியர் ஒருவர், இளைஞர் ஒருவர் ஏன் நாட்டின் தலைவராக வரமுடிய வில்லை” என்று கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த வெளியுறவுத் துறை அமைச்சரும், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவருமான பிரணாப் முகர்ஜி, “இளம் வயதில் அரசியலுக்கு வந்து நாட்டின் பிரதமராக திறம்பட பணியாற்றியவர் ராஜீவ் காந்தி. அவருடைய அடிச்சுவட்டை பின்பற்றி நடை போட்டு வருகிறார் அவரது மகன் ராகுல் காந்தி. அவர், இந்தியாவின் பிரதமராக வரும் காலம் வெகு தொலைவில் இல்லை” என்றார். (ஓ-6)

## இலங்கையில் போரை நிறுத்தக்கோரி கறுப்புக்கொடி ஏற்றிய பொதுமக்கள்

(பல்லடம்)

இலங்கையில் போரை நிறுத்தி, தமிழர்களை காப்பாற்ற வேண்டும் என கோரிக்கை விடுத்து, பல்லடம் அருகே ஆறு கிராமங்களில் வசிக்கும் பொதுமக்கள், வீடுகள் மற்றும் கடைகள் முன்பு நேற்று முன்தினம் கறுப்பு கொடியேற்றினர்.

அதன்பின் வாவிபா ளையம் பிரிவில், இலங்கை ஜனாதிபதி ராஜ பக்ஷவின் உருவப் பொம்மையை எரித்த 75 பேரை பொலிஸார் கைதுசெய்தனர்.

பல்லடம் அருகே வாவிபாளையம், மேல்குள்ளம்பாளையம், கீழ்குள்ளம்பாளையம், முத்தூர், வரப்பாளையம், மேட்டுக்கடை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள், இலங்கையில் போரை தடுத்து நிறுத்தி, தமிழர்களை மத்திய அரசு காப்பாற்ற வேண்டும். என்பதை வலியுறுத்தி தங்களது வீடுகள், கடைகள் முன்பு நேற்று முன்தினம் கறுப்புக் கொடியேற்றினர்.

இதேவேளை, இலங்கையில் போரை நிறுத்தி தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தி வாவிபாளையம் ஊராட்சி பொதுமக்கள், சுந்தரமூர்த்தி தலைமையில் நேற்று முன்தினம் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. (ஓ-6)

## மத்திய அரசின் அலட்சியத்தில் தி.மு.கவுக்கும் பங்கு உண்டு

### டி.ராஜா குற்றச்சாட்டு

(சென்னை)

இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசு காட்டும் அலட்சியத்தில் தி.மு.க.வுக்கும் பங்கு உள்ளது என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலாளர் டி.ராஜா குற்றஞ் சாட்டினார்.

இது குறித்து சென்னையில் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்படுத்துவது பற்றி தி.மு.க.வினர் முரண்பாடாக பேசி வருகின்றனர். பிரணாப் முகர்ஜியை உடனே இலங்கைக்கு அனுப்ப வேண்டும் என இங்குள்ள திமுகவினர் கூறுகின்றனர். ஆனால் நினைத்தவுடன் பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்ப முடியாது என மத்திய அமைச்சர் டி.ஆர். பாலு கூறுகிறார்.

பிரணாப் முகர்ஜியை விரைவில் இலங்கைக்கு அனுப்புவோம் என மன் மோகன் சிங் கூறியுள்ளார். இலங்கையில் ஒரு இனமே அழியப் போகிறது. தமிழர்கள் அழிந்த பிறகு பிரணாப்பை அனுப்பப் போகிறாரா எனத் தெரியவில்லை.

இப்பிரச்சினையில் இந்திய அரசு மிகவும் அலட்சியம் காட்டுகிறது. இதில் திமுகவுக்கும் பங்கு உள்ளது. இப்பிரச்சினையில் தமக்குள்ள பொறுப்பையும், கடமையையும் திமுக தட்டிக் கழிக்க முடியாது.

மத்திய அரசில் திமுகவும் இடம் பெற்றுள்ளது. எனவே இலங்கைத் தமிழர்களுக்கு மத்திய அரசு இழைக்கும் துரோகத்தால் வரும் பாவத்தின் பெரும்பகுதியை திமுக சுமந்தே ஆக வேண்டும் என்றார். (ஓ-6)

## இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி வழியைப் பின்பற்றி இலங்கையில் போர்நிறுத்தம் ஏற்படவழி செய்யவேண்டும்

### சோனியாகாந்திக்கு ராமதாஸ் கடிதம்

(சென்னை)

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்படுத்த முயற்சிக்குமாறு மத்தியஅரசை கேட்டுக் கொள்ள வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்கு பாமக நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக சோனியாவுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில்,

இலங்கைத் தமிழர் அனுபவிக்கும் இன்னல் குறித்து ஏற்கனவே தெரிவித்திருந்தேன். விடுதலைப்புலிகளுக்கு எதிராகப் போர் நடத்துவதாக கூறிக்கொண்டு அப்பாவி தமிழர்களை இலங்கை இராணுவம் கொன்று குவித்து வருகிறது.

இதற்காக தமிழகத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்சிகளும் 6 கோடி தமிழர்களும்இலங்கை அரசை எதிர்த்து ஒருமித்த குரலில் கண்டனம் எழுப்புவது தாங்கள் அறிந்ததே.

முதல்வர் கருணாநிதி தலைமையில் அனைத்துக் கட்சிக்குழு பிரதமர் மன்மோகன் சிங்கை டிசம்பர் 4ஆம் திகதி சந்தித்து இலங்கையில் உடனடியாகப் போர் நிறுத்தம் ஏற்படுத்த இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும் என்று வலியுறுத்தியது.

வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்பி பேச்சு வார்த்தை நடத்துவதாக அக் குழுவிடம் பிரத மர் உறுதி அளித்தார். ஆனால் அவர் அளித்த உறுதி மொழியைக் காப்பாற்றவில்லை. தமிழகத்தின் ஒருமித்த குரலுக்கு மத்திய அரசு செவி சாய்க்கவில்லை. கடந்த ஒரு மாதத்தில் நிலை மேலும் மோசமாகி விட்டது.

தமிழர்கள் முல்லைத்தீவில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

தற்போது இலங்கை இராணுவம் முல்லைத்தீவை நோக்கி நகரத் தொடங்கியுள்ளது. அங்கு தாக்குதல் தொடங்குமானால்ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்கள் இலங்கை இராணுவத்தினரால்கொல்லப்படுவது உறுதி.




அப்படிஒருகறுப்பு நாளைஉலகம்சந்திக்காதபடி இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முன்னாள் பிரதமர்கள் இந்திராகாந்தி, ராஜீவ் காந்தி ஆகியோர் இலங்கையில் அமைதி ஏற்படுத்தும் விடயத்தில் காட்டிய ஈடுபாட்டைப் பின்பற்றி, தங்கள் வழிகாட்டுதலின்படி நடக்கும் மத்திய அரசு இலங்கை அரசுடன் பேச்சு நடத்தி போர் நிறுத்தம் ஏற்பட வழி வகுக்க வேண்டும்.

கடைசி புகலிடமாக உங்களிடம் இந்த வேண்டுகோளை வைக்கிறேன் என்று கடிதத்தில் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# மக்கள் சேவகன் மகேஸ்வரனின் சேவைகள் என்றும் மறக்க முடியாதவை



``இறைபணிச் செம்மல்'' தியாகராஜா மகேஸ்வரனின் ஜனன தினம் இன்றாகும். 1966 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 திகதி பிறந்த மகேஸ்வரன் 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பலவாணேசுவரர் ஆலயத்தில் புதுவருட வழிபாட்டில் ஈடுபட்டிருந்த வேளை படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்றிய மக்கள் சேவகன் மகேஸ்வரன் இறையடி சேர்ந்து ஒரு வருடம் உருண்டோடி விட்டது. 2000 ஆம் ஆண்டு முழுமையான அரசியலுக்கு வந்த மகேஸ்வரன் அந்த ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டு பெரு வெற்றி அடைந்திருந்தார்.

அதனையடுத்து 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்ட அவர் வெற்றி பெற்றதுடன் இந்து கலாசார அமைச்சராகவும் பதவியேற்றார். 2001 முதல் 2004 ஆம் ஆண்டு வரை அவர் இந்து கலாசார அமைச்சராக பதவி வகித்த போது இலங்கையில் சைவம் தழைத்தோங்க பாடுபட்டதுடன் 2 ஆவது உலக இந்து மாநாட்டை இலங்கையில் நடத்தியும் தீபாவளியை தேசிய விழாவாகக் கொண்டாடியும் எண்ணுக் கணக்கற்ற ஆலயங்களைப் புனரமைத்தும் பல தொண்டுகளை ஆற்றியுள்ளார். அத்துடன் யாழ். செல்வச் சந்நிதியான் ஆலயத்திற்கு சித்திரத் தேரை செய்வதற்கும், திருக்கேதீஸ்வரர் ஆலயம் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் என்பவற்றை புனரமைத்து ஆலய பூஜைகள் இடம்பெறுவதற்கும் வழிசமைத்தார். ஆலயங்கள். அறநெறிப் பாடசாலைகளுக்கு முச்சக்கர வண்டிகளை வழங்கினார். இவ்வாறு பற்பல பணிகளை அவர் ஆற்றியதன் மூலம் சைவத்திற்கு இலங்கையில் மறுமலர்ச்சியினை ஏற்படுத்தினார்.

2004 ஆம் ஆண்டு கொழும்பில் போட்டியிட்ட மகேஸ்வரன் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மயிரிழையில் உயிர் தப்பினார். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றபடி அவர் வெற்றி பெற்றார். கொழும்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரான பின்னர் அவர் செய்த சேவைகள் அளப்பரியன.

தமிழ் மக்களுக்காக தனது இன்னுயிரை தியாகம் செய்த மகேஸ்வரனின் நினைவாக அவரது ஜனனதினமான இன்றுகாரைநகர் மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்மன் கோவில் வளவில் "மகேஸ்வரன் தரும சுரபி" என்ற மண்டபம் திறந்து வைக்கப்படவுள்ளது.

மகேஸ்வரனின் நினைவாக அமையும் இந்த மண்டபத்தினை சிவத்தமிழ் வித்தகர், கலாநிதி, மூதறிஞர், பண்டிதமணி க. வைத்தீஸ்வரக் குருக்கள் இன்று காலை 9 மணிக்கு திறந்து வைக்கவுள்ளார்.

தான் பிறந்த ஊரான காரைநகருக்கும் மக்களுக்கும் சேவையாற்ற வேண்டும், அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற துடிதுடிப்பு மகேஸ்வரனிடம் காணப்பட்டது.

காரைநகர் கோவில்களில் உற்சவம் என்றாலே மகேஸ்வரன் எங்கிருந்தாலும் அதில் பங்கு பற்றுவார். அதேபோல் நல்லூர் உற்சவத்திலும் அவர் பங்குபற்றத் தவறுவதேயில்லை. மகேஸ்வரனின் சேவைமனப் பான்மைக்கும் அவரது வெற்றிகளுக்கும் சேவைகள் மறக்கப் பட முடியாதவை. மகேஸ்வரன் தனது குடும்பத்தை விட நாட்டையும் மக்களையும் அதிகமாக நேசித்தார்.

**காரைநகர் மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்மன் கோவிலில் ``மகேஸ்வரன் தரும சுரபி'' மண்டபம் அன்னாரின் ஞாபகார்த்தமாக இன்று 10 ஆம் திகதி அவரது ஜனன தினத்தில் திறந்து வைக்கப்படுகிறது.**

காரைநகர் மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்மன் கோவிலில் அன்னதான மண்டபம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்பது மகேஸ்வரனின் எண்ணமாக இருந்தது. மண்டபத்தை அமைக்கும் முயற்சியில்



ஈடுபட்டிருந்தபோது அவரது இன்னுயிர் பிரிக்கப்பட்டிருந்தது.

கணவனின் எண்ணத்திற்கு ஏற்ப மணற்காடு முத்துமாரி அம்மன் கோவிலில் "மகேஸ்வரன் தருமசுரபி" என்ற மண்டபத்தை அவரது பாரியார் திருமதி விஜயகலா மகேஸ்வரன் அமைத்துள்ளார். கணவரின் ஓராண்டு நினைவு தினத்துக்குள் மண்டபத்தை அமைத்துள்ள திருமதி மகேஸ்வரன், அன்னாரின் ஜனன தினத்தன்று மண்டபத்தினை திறந்து வைக்க நடவடிக்கை எடுத்துள்ளமை பாராட்டுதற்குரியதாகும்.

உறுதுணையாக திருமதி விஜயகலா மகேஸ்வரன் திகழ்ந்தார் என்றால் மிகையாகாது.

கணவனின் கனவுகள் நனவாக வேண்டும் என்பதற்காக அவர் தொடர்ந்தும் செயற்படுகின்றமை பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

மகேஸ்வரனின் ஓராண்டு நினைவு நிகழ்வுகள் கொழும்பிலும் யாழ்ப்பாணத் திலும் வெகு சிறப்பாக நடைபெற்றன. கடந்த மாதம் 21 ஆம் திகதி கொழும்பு கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்ற அன்னாரின் ஓராண்டு நினைவு தின நிகழ்வில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

இதேபோல் காரைநகர் ஈழத்து சிதம்பரம், செல்வச் சந்நிதியான் ஆலயம், வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயம் என்பவற்றில் நடைபெற்ற நினைவு தின வைப வங்களிலும் பெருமளவானோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்ட மக்களின் எண்ணிக் கையானது மகேஸ்வரனின் சேவைகளைப் பறைசாற்றுவதற்கான சான்றாக அமைந் தது.

குறுகிய காலத்தில் அரசியலில் மிளிர்ந்த மகேஸ்வரன் தமிழ் மக்களுக்காக செய்த

தமிழ் மக்கள் துன்பப்படும் போதும் துயரப்படும் போதும் துடிதுடித்துப் போகும் மகேஸ்வரன் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து கொண்டு அநீதிகளுக்கு எதிராகப் போராடினார்.

அனைவருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகும் சுபாவம் கொண்ட அவர் சகல தரப்பினருடனும் நண்பனாக விளங்கினார். ஐ.தே.க. வில் இருந்தபோதும் அவசரகால சட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்காத ஒரே ஒரு தமிழன் என்றால் அது மகேஸ்வரனே யாவார்.

**கந்தசாமி கதிர்வேலாயுதம்**
தெல்லிப்பளை.

எத்தனையோ பிரச்சினைகள், இடையூறுகள், சோதனைகள் வந்த போதிலும் தனது கொள்கையிலிருந்து விலகாது நின்றவர் மகேஸ்வரன்.


இறுதி மூச்சு வரை தமிழ் மக்களுக்காக வாழ்ந்த மகேஸ்வரனை தமிழ் மக்கள் என்றும் மறக்கப் போவதில்லை என்றும் அவர் மக்களின் நெஞ்சங்களிலேயே இருப்பார். அவரது ஆத்மாவுக்காக அன்னாரது ஜனன தினத்தில் நாமும் பிரார்த்திப்போம்.















அகில இலங்கை இந்துமாமன்றத்தின் பணிகள் யாழ்ப்பாணத்தில் சிறக்கும் வண்ணம், நல்லூர் கோவில் வீதியில் அமைக்கப்பெற்ற மூன்று மாடிக் கட்டத்தின் முன் முகத்தோற்றத்தையும், அக் கட்டடத்தின் திறப்புவிழாவில் வரவேற்பு வாயிலை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் திறந்து வைப்பதையும்,பிரதான மண்டபத்தை அகில இந்து மாமன்றத் தலைவர் வி.கயிலாசபிள்ளை தம்பதிகள் திறந்து வைப்பதையும்,நூலக மண்டபத்தை அகில இலங்கை இந்துமாமன்ற செயலாளர் கந்தையா நீலகண்டன் தம்பதிகள் திறந்துவைப்பதையும்,விழாவில் கலந்துகொண்ட மக்களையும் படங்களில் காணலாம்.

# ஜனன தின நினைவும்
## மண்டபத் திறப்பு விழாவும்

## ‘மகேஸ்வரன் தருமசுரபி’



யாழ்., கொழும்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும்
இந்து கலாசார அமைச்சருமான “இறைபணிச்செம்மல்”

## மாண்புமிகு தியாகராசா மகேஸ்வரன்

அவர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள

## “மகேஸ்வரன் தருமசுரபி”

மண்டபத்தை அன்னாரது பிறந்த தினமான இன்று சிவத்தமிழ்வித்தகர், கலாநிதி, முதறிஞர், பண்டிதமணி க.வைத்தீஸ்வரக்குருக்கள் ஆசீர்வதித்து திறந்து வைக்கிறார்.

**இடம் : மணற்காடு முத்துமாரி அம்மன் கோவில்**
**நாள் : 10-01-2009 (சனிக்கிழமை)**
**நேரம் : காலை 9.00 மணி**

276, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021-222 7559

தகவல் :
திருமதி விஜயகலா மகேஸ்வரன், பிள்ளைகள்,
குடும்பத்தினர், சின்னாலடி, தங்கொடை.

இது ஒரு விளம்பரம்

# உச்ச ஸ்தான 1000 வங்கிகளுக்குள்

# தலாவது இலங்கையின் வங்கி

மை, மூலதன நிறைவு போன்ற காரணங்களினால், உலக வங்கித்துறையில் முன்னிலையில் உள்ள 1000 தலைசிறந்த வங்கிகளுக்குள் கொமர்ஷல் தரப்படுத்தலுக்குள் சேர்ந்து கொண்ட முதலாவது இலங்கையின் வங்கியே கொமர்ஷல் வங்கி.

கின்றது. இத்தரப்படுத்தலை தேர்ந்தெடுத்து தொகுத்து வெளியிடுவது ஐக்கிய இராச்சியத்தின் முதற்தர நிதியியல் சஞ்சிகையான "த பாங்கர்".

. இவ்விருது எமது ஊழியர்களுக்கு பெருமையையும், உயர்ந்த தர வங்கியியல் தரத்தை பேணுவதற்கும் உந்துசக்தியையும் வழங்குகின்றது.

## வடக்கு, கிழக்கு விடுதலைப் போராட்டம்

## மலையக மக்களின் விடிவுக்கு உறுதுணையாகும்

### என்.ஸ்ரீகாந்தா எம்.பி



(கொழும்பு)

வடக்கு கிழக்கின் விடுதலைப் போராட்டமானது மலையக மக்களின் விடிவிற்கு உறுதுணையாக அமையும் என தமிழ்த்தேசிய பாராளுமன்றக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஸ்ரீகாந்தா நேற்று முன்தினம் சபையில் தெரிவித்தார்.

ஆசியாவில் மட்டுமல்ல முழு உலகிலேயுமே மிக மோசமாக வஞ்சிக்கப்பட்ட சமூகம் பெருந்தோட்ட சமூகமாகும். 1948 ஆம் ஆண்டில் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டவர்களாக காணப்பட்ட மக்களின்! வாக்குப் பலத்தால் பாராளுமன்றத்திற்குள் நுழைந்தவர்கள் இன்று அரசாங்கத்தின் ஒட்டுண்ணிகளாக இருக்கின்றனர்.

இவர்கள் என்று தூக்கியெறியப்படுகின்றனரோ அன்றுதான் மலையக மக்களுக்கான விடிவு கிடைக்கும் என்றும் அவர் கூறினார். பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நாடற்ற பிரஜைகளுக்கு பிரஜாவுரிமை வழங்கல் சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கூறுகையில், இந்தியாவிலிருந்து கப்பல்களில் ஏற்றி வந்து மன்னாரில் இறக்கப்பட்டவர்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் கால்நடையாகவே காட்டு வழிகளினூடாக மலைநாட்டுக்கு அழைத்து வரப்பட்டனர்.

பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்குப் பின்னர் ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக்கட்சி தனது முதல் அழுத்தத்தை தோட்டத் தொழிலாளர்கள் மீதே பிரயோகித்தது.

1948 ஆம் ஆண்டில் பிரஜாவுரிமை பறிக்கப்பட்ட மக்களாக ஓரங்கட்டப்பட்ட தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமை மீண்டும் பெறப்பட்டதன் அடிப்படையிலேயே இன்று மலையகக் கட்சிகள் மீட்சிபெற்றுள்ளன.

அதே மக்களின் வாக்குப்பலத்தால் பாராளுமன்றத்திற்கு வந்துள்ள மலையக தொழிற்சங்கத்தலைவர்கள் இன்று அரசாங்கத்துடன் ஒட்டுண்ணிகளாக செயற்பட்டு வருகின்றனர்.

அடிப்படை வசதிகளற்ற தோட்டத்தொழிலாளர்கள் இன்றைய மலையகக் கட்சிகளால் இன்னும் ஏமாற்றப்பட்டே வருகின்றனர்.

இவ்வாறான தலைவர்களும் கட்சிகளும் என்று தூக்கியெறியப்படுகின்றதோ அன்றுதான் பெருந்தோட்ட மக்களுக்கு விடிவு பிறக்கும். வடக்கு, கிழக்க விடுதலைப் போராட்டத்தில் மலையகத்தின் பங்கும் இருக்கின்றது.ஆதலால் வடக்கு, கிழக்கின் விடுதலைப் போராட்டமானது மலையக மக்களின் விடிவுக்கு உறுதுணையாக இருக்கும் என்றார். (ஓ-6)

## லெபனானிலிருந்து இஸ்ரேல் மீது

## —எறிகணைத் தாக்குதல்—

தென் லெபனானிலிருந்து இஸ்ரேல் மீது எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து, மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

பாலஸ்தீன காஸா பிராந்தியத்தில் இஸ்ரேல் வான் மற்றும் தரை வழித் தாக்குதல்களை நடத்தி வரும் சூழ் நிலையில், லெபனானிலிருந்து இஸ்ரேல் மீது எறிகணைகள் ஏவப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் மேற்படி எறிகணைத் தாக்குதலை லெபனான் பிராந்தியத்திலுள்ள ஹிஸ்புல்லா போராளிகள் நடத்தியிருப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என லெபனானிய தகவல் அமைச்சர் தாரெஹ் மித்ரி மறுப்புத் தெரிவித்துள்ளார்.

லெபனானின் ஸ்திரத் தன்மைக்கு குந்தகம் விளைவிக்கும் எந்தவொரு செயலிலும் ஈடுபடுவதில்லை என ஹிஸ்புல்லா அமைப்பினர் எமது அரசாங்கத்துக்கு உறுதியளித்துள்ளார் என அவர் கூறினார்.

காஸா பிராந்தியத்தில் கடந்த டிசம்பர் 27 ஆம் திகதி முதல் இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதல்களில், இதுவரை 689 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் 220 பேர் சிறுவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

உலகில் சன நெருக்கடி மிக்க பிரதேசங்களிலொன்றாக விளங்கும் காஸா மீதான இஸ்ரேலிய தாக்குதல்கள் தொடரும் பட்சத்தில் மேலும் பெருந் தொகையான உயிரிழப்புகள் இடம்பெறும் அபாயமுள்ளதாக மனிதாபிமான உதவி நிறுவனங்கள் எச்சரித்துள்ளன.

12நாள் தாக்குதலுக்கு பின் காஸா பிராந்திய மக்களுக்கு அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்யவும் அன்றாட கடமைகளை நிறைவேற்றவும் உறவினர்களது சடலங்களை அடையாளம் கண்டு நல்லடக்கம் செய்யவும் 3 மணித்தியால கால அவகாசம் இஸ்ரேலால் வழங்கப்பட்டது. (ஓ-6)

## க.பொ.த.(உயர் தர) பரீட்சை முன்னணிப் பெறுபேறுகள் சில...

**யாழ்/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்**

**வர்த்தகப் பிரிவு**

3B– சு.தனுசியா
2B,C– நா.பகீரதன் , ம.வசந்தரூபன், சா.ரஞ்சிதா
B,2C– ம.கனிஜா

**கலைப்பிரிவு**

3A– சு.சரண்ஜா
2A,B –த.கலைவாணி, ரா.சசிகலா,வெ.பிரதீபா, க.குகப்பிரியா, த.கேமினி, சு.பிருந்தா
A,2B–ஜெ.சபேசன் , இ.நிருபராஸ்.தி.மயூரன், ந.கார்த்திகா ,ஜெ.கௌசிகா

**உயிரியல் பிரிவு**

3C –உ.சரண்யா,
C, 2S – யோ.ஜீவன், ச.கஜனி

**கணிதப் பிரிவு**

2B,C–வ.சுஜேந்திரா
C,2S –செ.குணாலினி
3S–பா.பாலவரதன்

## மாவட்ட மட்ட வீட்டு தோட்டப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சின் கீழ் பயிர்செய்து தேசத்தைக் கட்டியெழுப்புவோம் எனும் தலைப்பில் உள்நாட்டு உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கான தேசிய இயக்கம் யாழ். மாவட்டத்தில் 2008ஆம் ஆண்டிற்கான மாவட்ட மட்ட வீட்டுத் தோட்டப் போட்டியை நடத்தியது. இதில் வெற்றியீட்டிய போட்டியாளர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 13 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை மாலை 2.30 மணிக்கு மாவட்ட விவசாயக் குழு முன்னிலையில் மாவட்ட செயலகக் கூட்ட மண்டபத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதேசசெயலர்/உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரம் பின்வருமாறு,

**தனியார் வீட்டுத் தோட்டப் போட்டி**

சாவகச்சேரி– இ.தர்சினி (கொடிகாமம்), சண்டிலிப்பாய் –கி.சாந்தாகிருஷ்ணன்( மானிப்பாய்), நல்லூர் – என்.கனகலிங்கம் (கொக்குவில்)

**பாடசாலை தோட்டப் போட்டி**

யாழ்ப்பாணம்–சென்ஜோன்ஸ் கல்லூரி, உடுவில்–ஏழாலை மகாஜனா வித்தியாலயம், கரவெட்டி–நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

**பாடசாலை மாணவர் வீட்டுத் தோட்டப் போட்டி**

நல்லூர்–எஸ்.சுலோஜனா (நாயன் மார்கட்டு), நெடுந்தீவு–ரி.அகில் செல்வன் (2ஆம் வட்டாரம்), கோப்பாய்–த.திருக்குமரன் (கணபதிபுலம்)

**அலுவலக தோட்டப் போட்டி**

சண்டிலிப்பாய்–பிரதேச செயலகம் சண்டிலிப்பாய், சங்கானை–பிரதேச செயலகம், சங்கானை, ஊர்காவற்றுறை–உதவி அரசாங்க அதிபர் பணிமனை, ஊர்காவற்றுறை.

**அலுவலரின் உத்தியோகபூர்வ வதிவிட தோட்டப் போட்டி**

வேலணை– பி.சிறிகாந்தன் அலுவலகப் பணியாளர், பிரதேசசபை (புங்குடுதீவு), நல்லூர் – எஸ். பிரதாபராஜன் , சாரதி, இலங்கை போக்குரவத்துச் சபை (கோண்டாவில்) , பருத்தித்துறை– திருமதி உ.விஜயராணி,பதில் நீதவான் மாவட்ட நீதிமன்றம்(புலோலி). (ஓ-4)

## மாரடைப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ

## புதிய மூளை குளிர்விப்பு உபகரணங்கள்

### பிரித்தானிய விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

மாரடைப்பு மற்றும் பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் மூளை சேதமடைவதைத் தவிர்க்கும் வகையில் புதிய மூளையை குளிர்விக்கும் உபகரணங்களை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

மாரடைப்பு மற்றும் பாரிசவாதம் என்பவற்றின் போது நரம்புக் கலங்களிலிருந்து தீங்கு விளைவிக்கும் இரசாயனங்கள் வெளியேறுவதை மேற்படி உபகரணங்கள் மந்தகதி அடையச் செய்து மூளையைப் பாதுகாப்பதாக பிரித்தானிய எடின்பேர்க் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இந்த விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

அத்துடன் இந்த நோயாளிகளைக் காப்பாற்றும் முகமாக குளிர்மையான நாசித்துவார தெளிப்பான் மற்றும் நுரையீரல்களுக்கான குளிர் ஊசி மருந்து என்பவற்றையும் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

அவர்களது புதிய கண்டு பிடிப்புகள் தொடர்பான விபரங்கள் நியூ சயன்ரிஸ்ட் சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ளன.

இந்த உபகரணங்கள் மணித்தியாலயத்துக்கு 2.4 செல்சியஸ் வீதம் மூளையை குளிர்விப்பதாகக் கூறப்படுகிறது. (ஓ-6)

# இலங்கை தமிழர் பிரச்சினையில் இந்திய அரசின் பதில் என்ன?



சி.மகேந்திரன்

கிளிநொச்சி வீழ்ந்ததைப் பற்றி பரபரப்பாக பேசுவதை கொஞ்சம் நிறுத்தி வைத்துவிட்டு, யுத்தத்தின் மறுபக்கத்தை கொஞ்சம் திரும்பிப் பார்ப்பது அவசியமானதாகும். போரில் நேரடியாக ஈடுபடுபவர்களை விட பொதுமக்கள் அடையும் துயரம் வார்த்தைகளால் சொல்லி மாளாது. ஆகாயத்திலிருந்து கொட்டப்படும் குண்டுகளிலிருந்து உயிர் காத்துக்கொள்ள முயற்சிக்கும் போராட்டம் இவர்களுக்கு.

ஒருஇலட்சம் மக்கள் கிளிநொச்சியை விட்டு வெளியேறிவிட்டார்கள் என்ற செய்தி பலருக்கு நம்ப முடியாததாக இருக்கிறது.

போர்நிறுத்தம், பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு ஆகிய இரண்டும் தான் இன்றைய இலங்கையின் தேவை. தமிழ் மக்களின் உயிருக்கும், தொன்மைமிக்க பண்பாட்டு வாழ்க்கைக்கும் ஒரு பேரழிவு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது எவ்வளவு உண்மையானதோ, அவ்வளவு உண்மை, சிங்கள மக்களின் எதிர்காலமும் இந்தப் போர் மூலம் நாசப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதும்.

இலங்கையின் இந்த ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் பொதுமக்களின் அடிப்படைத் தேவைகள் அனைத்தையும் புறக்கணித்துவிட்டு இராணுவத்திற்காக மட்டுமே தொகை ஒதுக்கிய பட்ஜெட்டாக அமைந்துவிட்டது.

மொத்த வரவு செலவுத் திட்டத்தில் 20 சதவீதத்தை இராணுவத்திற்கு ஒதுக்கியிருக்கிறார்கள். இது இலங்கை ரூபாயில் 17 ஆயிரம் கோடி என்று கூறப்படுகிறது. இன்றைய உலகில் இத்தகைய பெரும் தொகையை இராணுவத்திற்கு எந்த நாடும் ஒதுக்கியதில்லை.

அமெரிக்கா, பாகிஸ்தான், இஸ்ரேல், சீனா, இந்தியா, ஈரான் முதலான நாடுகள் இலங்கையுடனான ஆயுத வியாபாரத்தில் பெருந்தொகையைப் பெற்றுவிட்டன.

இதைத்தவிர, பெரும் எண்ணிக்கையில் இலங்கை இராணுவத்தினர் இறந்த பிறகும், சிங்கள குடும்பங்கள் ஒவ்வொன்றும் ஒருவரை இலங்கை இராணுவத்திற்குத் தர வேண்டும் என்று அண்மையில் இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ வெளிப்படையாகவே கூறியுள்ளார்.

ஒரு காலத்தில் தனி ஆட்சி நடத்திய தமிழ் மன்னர்களின் மீது பகைமை கொண்டு படை திரட்டிய சிங்கள அரசர்களின் வெறிச் செயலைத்தான் இது நமக்கு நினைவுபடுத்துகிறது.

இலங்கை இராணுவத்தின் இன்றைய நெருக்கடியை, முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர, தெளிவுபடுத்தியிருக்கிறார். இதன்படி கொல்லப்பட்ட இராணுவ வீரர்களின் எண்ணிக்கை 10 ஆயிரம் என்றும் ஊனமுற்றவர்கள் 25 ஆயிரம் பேர் என்றும் தெரிகிறது. இப்பொழுது மீண்டும் 37ஆயிரம் பேரை இராணுவத்தில் சேர்த்திருக்கிறார்கள்.

இலங்கை விடுதலை அடைந்தபோது சிங்கள மக்களின் எண்ணிக்கை 70 இலட்சம் என்று கூறப்பட்டது. தமிழ்மக்களின் அன்றைய மக்கள் தொகை 35 இலட்சம். இதில் மலையகத் தமிழர்களும், முஸ்லிம் தமிழர்களும் அடங்குவார்கள். இன்று இலங்கையில் சிங்கள மக்களின் எண்ணிக்கை 1 கோடியே 25 இலட்சம். அதேநேரத்தில் இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் எண்ணிக்கை 35 இலட்சம் என்று கூறப்படுகிறது.

60 ஆண்டுகளில் சிங்கள மக்களின் எண்ணிக்கை சுமார் இரண்டு மடங்காகப் பெருக்கம் அடைந்துள்ளபோது, தமிழ் மக்களின் எண்ணிக்கை ஏன் பெருக்கம் அடையவில்லை? இதில் அடங்கியுள்ள இன அழிப்பு கொள்கையை எப்படி நம்மால் புரிந்துகொள்ளாமல் இருக்க முடியும்?

இலங்கை அரசின் மற்றொரு முகம் மிகவும் கொடூரம் மிக்கதாக இருக்கிறது. தமிழ் மக்களின் மீதான வான்வெளித்தாக்குதலை இது நடத்துகிறது. இதுவரை ஆறாயிரம் முறை குண்டுகள் போடப்பட்டுள்ளன. அடிப்படையான போரைத் தரையில் நின்று இலங்கை இராணுவம் நடத்தவில்லை. பன்னாட்டு இராணுவத்தின் துணைகொண்டு வான்வெளித் தாக்குதலை நடத்துகிறது. விமானத்திலிருந்து போடப்படும் குண்டுகள் உலகில் பல நாடுகளில் தடைசெய்யப்பட்டவை. கண்ணிவெடிகள் அபாயம் மிகுந்தவை. இவை மொத்தம் 10இலட்சம் பேரை கம்போடியாவில் மட்டும் கொலை செய்திருக்கிறது.

கண்ணிவெடியைப் போன்ற அபாயம் நிறைந்ததாகக் கருதப்படும் மற்றொன்றுதான் கொத்து வெடிகுண்டுகள் (கிளஸ்டர் குண்டுகள்). வானிலிருந்து பரசூட்டுகள் மூலம் கீழிறக்கப்படும் இந்தக் குண்டுகள் ஒன்று நூறாகப் பிரிந்து வெடித்து மண், மரம், செடி, கொடிகளுக்கு பேராபத்தை விளைவிக்கக் கூடியவை. ஒரு குறிப்பிட்ட இனமக்களை அழிக்க, இந்த வகையாக குண்டுகள்தான் பயன்படுத்தப்படுகின்றன. பாலஸ்தீனத்தின் காசா பகுதிகளில் இந்த குண்டுகள் போடப்பட்டுள்ளன. காற்றில் வெடித்து உரசி வெடிக்கக் கூடியவை இந்தக் குண்டுகள். வெடிக்காமல் கிடக்கும் குண்டுகள் பல ஆண்டுகள் காத்திருந்து மக்கள் உயிரை வாங்கும் அபாயத்தையும் தனக்குள் தேக்கிவைத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை இந்த கிளஸ்டர் குண்டுகளின் அபாயம் குறித்து ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளது. 2008 ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதி நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் சிறப்புக் கூட்டம் நடந்துள்ளது. இதில் 122 நாடுகள், ‘‘கிளஸ்டர் குண்டுகளை உற்பத்தி செய்வதும் இல்லை. விற்பனை செய்வதும் இல்லை’’ என்று ஐ.நாவின் வழிகாட்டுதலின்படி கையொப்பமிட்டுள்ளன.

கொடுமைமிக்க கிளஸ்டர் குண்டுகள் தான் இலங்கைத் தமிழ்மக்களின் மீது பெரும் எண்ணிக்கையில் போடப்பட்டுள்ளது. எதிரிகளின் இலக்குகள் பற்றி கவலையில்லாமல் குண்டுகளைப் போடுதல் பொதுமக்களை அழிக்கும் நோக்கம் கொண்டதாகத் தான் இருக்கமுடியும். தமிழ் மக்களைக் கொன்றும், ஊனப்படுத்தியும் மகிழ்ச்சியடையும் இந்த யுத்தம் மூலம் தமிழ் மக்களின் பூர்வ பிரதேசங்கள் எதற்கும் பயன்படாதவாறு குண்டுகளின் மூலம் நாசப்படுத்தப்பட்டுவிட்டது.

மனிதனைப் போலவே மண்ணும் கொஞ்சம் கொஞ்சமாகத் தன் உயிரைஇழந்து கொண்டிருக்கிறது.

உலகமயமும், தாராளமயமும் இன்று உலக இன அழிப்பு மயத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது என்பது தெளிவாகி விட்டது. ஆப்கானிஸ் தானிலும், ஈராக்கிலும், பாலஸ்தீனத்திலும் புகழ்மிக்க ஆதியினங்களின் அடையாளங்களை யுத்தத்தின் மூலம் அழிக்கும் முயற்சியில் இடைவிடாது ஈடுபட்டு வருகிறது அமெரிக்கா.

இலங்கைத் தமிழ் மக்களையும் இவ்வாறு அழிப்பதற்கு இதே போன்று திட்டங்களைச் செயல்படுத்துகிறார்களா என்ற கேள்வி தவிர்க்க முடியாமல் எழுந்துவிட்டது. அமெரிக்கத் தளபதியுடன் இணைந்து இந்தியத் தளபதியும், பாகிஸ்தான் தளபதியும் வன்னிப் பிரதேசத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான போருக்குத் திட்டம் வகுத்துக் கொடுத்துள்ளனர். இதன் மூலம் தமிழ் மக்களை படுகொலை செய்யும் யுத்தத்தை இந்திய அரசு முன்னின்று நடத்துகிறதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இதனைப் போக்க வேண்டிய கடமை மன்மோகன் சிங்குக்கு இருக்கிறது. இல்லாவிட்டால் தமிழகத்தின் 6 கோடி மக்களும் அவரை எதிர்காலத்தில் மன்னிக்க மாட்டார்கள் என்பதை அவர் உணர்ந்து கொள்ளுதல் அவசியமானதாகும்.

*நன்றி:-தினமணி*

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

4-I



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

பயிர்ச் செய்கைக்கு அவசியமான வளங்களுள் மண் வளமும் ஒன்று. இருக்கின்ற மண் வளத்தைத் திட்டமிட்டு பயன்படுத்தினால் நல்ல பயிர் செய்யலாம்.

மண்வளத்தை மேம்படுத்தி சிறப்பாகப் பயன்படுத்தும் போது வரண்ட பிரதேசத்து இப்பூமி பசுமை பெறும். பசியனைத்தும் போக்கிவிடும். மண்ணை வளமாக்கத் தவறினால் அனைத்துமே மண்ணாகிடும்.

**மண் வளம் போல் எதுவுமுண்டா?**

நல்ல மண்வளம் கிடைப்பது அருமையிலும் அருமை. கிடைத்த வளத்தை சிறப்பாகப் பயன்படுத்துவது அதனிலும் பெருமை. அதனால் தான் “மணாளன்” என்றார்களோ!

எமது நாடு வளமான நாடு. அனைத்து தட்ப வெப்ப சூழ்நிலைகளையும் தன்னகத்தே கொண்டுள்ள அதிசய சிறிய தீவு. மடுவும் மலையும் வற்றாத நதியும் கொண்டு வேண்டிய அனைத்தையும் ஒருமித்துப் பெற்ற அருமையான நாடு. மதிப்புக்குரிய திருநாடு. இதைவிட்டு ஓடுபவர்களுக்கு இந்த மண்ணின் பெறுமதி தெரியாது.

**வளமென்று என்ன இல்லை இங்கே?**

மண்ணை தாய்மைக்கு ஒப்பிடுவர். மண்ணில் உள்ள அனைத்து வளங்களையும் இயற்கையுடன் இணைந்தவாறு பயன்படுத்தினால் இருக்கின்ற வளங்களுடன் பசுமையில் புதுமைகள் பல செய்திடலாம். தாய்மையும் அப்படித்தானே!

தாவரங்கள், சிறப்பாக வளர நல்ல மண் தேவை. மண்ணிலுள்ள தாவரங்களுக்கு மிகவும் தேவையான கனிப்பொருட்கள் வேர்களினூடாக அகத்துறிஞ்சப்படுவதற்கு மண்ணிலே இலகுவாக அகத்துறுஞ்சும் நிலையில் இச் சத்துக்கள் இருக்க வேண்டும். மண்ணின் தன்மை, அது கொண்டுள்ள இடைவெளி, அதிலிருக்கும் நீர் என அனை த்தும் இங்கே முக்கியமானவை. மண்ணிலுள்ள மென்மைத் தன்மை அதில் வேர்கள் இலகுவில் வளர்ந்து கிளைவிட்டு பரவுவதில் தங்கியிருக்கின்றது.




வேர்மயிர்கள் அதிகமாக இருக்கும் போது சத்துக்கள் இலகுவாக அகத்துறிஞ்சப்படும். முக்கியமான சத்துக்களாக தழைச் சத்து (நைதரசன்), மணிச்சத்து (பொசுபரசு) மற்றும் சாம்பல்சத்து (பொட்டாசு) ஆகியவை தேவையானளவு கிடைக்கும் போது தாவரம் சிறப்பாக வளரக்கூடியதாக இருக்கும்.

இவற்றுடன் சேர்த்து சிறியளவில் பல வகையான நுண்ணூட்டச் சத்துக்களும் தேவைப்படும். ஒன்று குறைந்தாலும் குறைபாடு ஆகிவிடும்.

மண்ணின் உயிர்ப்புத்தன்மைக்கு அதிலிருக்கும் நன்மை தரும் நுண்ணங்கிகளும் அவற்றின் தொழிற்பாடும் முக்கியமானவை. வேர்த் தொகுதியில் காணப்படுகின்ற இவ்வாறான நன்மை தரும் நுண்ணங்கிகளின் சேர்க்கையினால் பெரிய மூலக்கூறுகள் உடைக்கப்பட்டு இலகுவில் வேரினால் அகத்துறிஞ்சக்கூடிய சிறிய மூலக் கூறுகளாகும். வேர்களிலிருந்து சுரக்கப்படுகின்ற சுரப்புக்களை உணவாகக் கொள்ளும் வேருக்கு நன்மை தரும் நுண்ணங்கிகள் பல்கிப் பெருகி வேர்த்தொகுதியை நோயையுருவாக்கும் நுண்ணங்களிடமிருந்து பாதுகாக்கின்றன.

இவ்வகை நுண்ணங்கிகளின் கூட்டணியை மேம்படுத்தும் எல்லா வகையான பயிர்ச்செய்கை முறைகளும் பயிரை நோயுருவாக்கும் நுண்ணங்கிகளிடமிருந்து பாதுகாக்க உதவும்.

மண்ணின் வளம் குறையும்போது அதிலிருக்கும் நல்ல நுண்ணங்கிகளின் அளவும்குறைவடையும். இவ்வாறுஎண்ணிக்கை நலிவடைய நோயுருவாக்கும் நுண்ணங்கிகளின் தீண்டலினால் பயிர் நோய்ப்பட்டு விடும்.

திரும்பத் திரும்ப ஒரே பயிரைச் செய்வதினால் இவ்வாறான நிலை ஏற்பட ஏதுவாகிவிடும். அயர்லாந்து நாட்டில் ஏற்பட்ட ‘ஐரிஸ் பஞ்சம்’ ஏற்படுவதற்கு இவ்வாறான மண்ணில் வாழும் உருளைக்கிழங்கில் தொற்று ஏற்படுத்தும் காரணியே காரணம். நெற்பயிரில் வந்த மண்ணிறப் புள்ளி நோயினால் வங்கப் பஞ்சம் வந்ததும் இதனால் பல இலட்சம் மக்கள் உண்ண உணவின்றி இறந்ததும் சென்ற பசுமைப் புரட்சிக்கு முன்னதான சோக நிகழ்வுகள்.

தனிமனிதனொருவனுக்கு உணவில்லை என்றால் இந்த ஜெகத்தினையே அழித்திடுவோம் என முழங்கிய கவிஞனின் வரிகள் பசுமைப்புரட்சியின் அவசியத்தை இங்கிதமாக உணர்த்தின. இன்றும் எவ்வளவு மக்கள் உண்ண உணவு இன்றி சாகடிக்கப்படுகின்றார்கள். பசுமைப் புரட்சியினால் சிறிய விவசாயிகளும், மக்களும் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

என்ன நடந்தது? மண் உயிர்ப்புத் தன்மையை இழந்து விட்டது. அப்படியென்றால்... செத்துவிட்டது. தொடர்ச்சியாக ஒரே பயிரை வளர்த்ததனால் அப் பயிருக்குத் தேவையான ஊட்டச் சத்துக்களனைத்தும் உறிஞ்சப்பட்டு முடிய ஊட்டச்சத்திற்கு பற்றாக்குறை ஏற்படும். இந்த முறையை நிவர்த்தி செய்ய ஊட்டச் சத்தினை நிலத்திற்கு இட வேண்டும்.

வளர்த்தது உள்ளீடுகளில் தங்கி நிற்கும் பயிர் இனங்களாதலினால் தேவையான ஊட்டச்சத்து உள்ளீடுகளாக நிலத்திற்கு இடப்படும் போது மட்டுமே அதிகூடிய விளைச்சலைத் தரக் கூடியதாயிருக்கும். உள்ளீடுகளில் குறிப்பாக அடியுரமாகவும் மேற்கட்டு உரமாகவும் அசேதனப் பசளைகள் நிறையவே பயன்படுத்தப்பட்டன.

சேதனப் பசளைகளுக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. (தொடரும்)

> காட்டுமிராண்டியின் விலங்குணர்ச்சி நம் எல்லோரிடமும் உள்ளடங்கிக் கிடக்கிறது.
>
> -ப்ராய்டு

வலம்புரி

## அப்பாவிப் பொதுமக்களைப் பாதுகாப்பது அரசின் தலையாய கடமை

'நாடென்ப நாடாவளத்தன நாடல்ல; நாட வளந்தரு நாடு' என்பது வள்ளுவனின் நாடு பற்றிய கணிப்பு. பொய்யாமொழி புலவரின் குறளுக்கு பலர் பொருள் எழுதியிருந்தாலும், மேற் குறித்த குறளுக்கான பொருள்.

நாட்டின் சிறப்பு எவ்வாறு அமையவேண்டும் என்பதைப் பிரதிபலிப்பதாக இருத்தல் வேண்டும்.

வாழ்கின்ற மக்களுக்கு நாடானது தானாக வளைந்து கொடுக்க வேண்டும். இயலாதவர்களும் முதியவர்களும் சிறுவர்களும் பெண்களும் எந்த வளம் தேவையென்று நினைக்கிறார்களோ அதற்கெல்லாம் வழிகாட்டுவதாக நாடு விளங்க வேண்டும்.

எனவே இங்கு நாட்டின் சிறப்பு என்பதற்கு இருக்கக் கூடிய பொருள் கோடல், அரசாகவே இருக்க முடியும்.

அதாவது நாட்டிற்கு சிறப்பு அரசாட்சியாகும். அரசு குடிமக்களுக்கு வேண்டிய அத்தனை வளங்களையும் வழங்க வேண்டும். இவ்வாறு மக்களுக்குத் தேவையான வளங்கள் அனைத்தையும் வழங்குவதையே நாடு எனக் கூறுகின்றார் வள்ளுவர்.

அப்படியாயின் இலங்கையை நாடு எனக் கூற முடியுமா? என்ற கேள்வி எழுகிறது. யுத்தம், இடப்பெயர்வு, மனித அவலம் ஒருபுறம். இழப்பு மறுபுறம். வெற்றிக் களிப்பு என்பதாகவே இலங்கை உள்ளது.

நேற்று முன்தினம் வன்னிப் பெரு நிலப்பரப்பில் அடங்கும் வட்டக்கச்சி, தருமபுரம் ஆகிய பகுதிகளில் நடந்த எறிகணை வீச்சில் ஒரு குழந்தை உட்பட ஏழு பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

இவை நேற்று முன்தினம் மட்டும் நடந்த உயிரிழப்பு. இதற்கு முன்பு நடந்தவை அறிந்தவை சுருங்கக் கூறின் ஒவ்வொரு நாளும் அவல மரணம் இந்த நாட்டில் நடந்து கொண்டே இருக்கிறது.

அப்பாவிப் பொதுமக்கள் துடிதுடித்துப் பலியாகிறார்கள். பெண்கள்,குழந்தைகள் கதறி அழுகின்றனர். இது நல்லாட்சிக்குரிய இலட்சணமல்ல.

யுத்தத்திலும் தர்மம் உண்டு. அந்தத் தர்மம் மீறப்படும்போது அதற்கான பாவவினை எல்லோரையுமே சாரும். ஈழத்தின் தலைசிறந்த தமிழ் எழுத்தாளர் செங்கைஆழியான் அவர்கள் 'மரணங்கள் மலிந்த பூமி' என தொடராக்கம் எழுதியிருந்தார்.

அவர் யுத்தத்தின் சமகால எழுத்தாளர் என்ற வகையில் மரணங்கள் மலிந்த பூமியென்ற எழுத்தியல் பொருத்துடையது.

ஆனால் இன்னும் ஐம்பது அறுபது ஆண்டுகளுக்கு பின்னர் இந்த நாட்டில் யுத்தம் இடம் பெறாது.

மாறாக நோயும், பஞ்சமும் பசி பட்டினியுமே தலைவிரித்தாடும். அப்போது 'பாவம் மலிந்த பூமி' என்ற புதியதோர் எழுத்தியல் படைப்பை அப்போது இருக்கக் கூடிய எழுத்தாளர் ஒருவர் எழுதிக் கொள்வார்.

ஏனெனில், இன்றைய அவல மரணத்திற்கான தோஷத்தின் அறுவடைக்கு ஐம்பது ஆண்டுகள் செல்லும்.

ஆக, வள்ளுவன் காட்டிய நாடுபற்றிய சிந்தனை ஆட்சியாளர்களிடம் ஏற்படவேண்டும். இல்லையேல், இந்த நாடு நாடு என்ற எல்லையை மீறி விடும்.

# திருவெம்பாவை - பாவை நோன்பு

மார்கழி மாதம் பூரணையும், திருவாதிரையும் சேர்ந்து வரும் காலம் சிறப்பானது. அந்த நட்சத்திரம் சிவபெருமானுக்கு உரியது. சிவாலயங்களில் இத்தினம் சிறப்பாகக் கொண்டாடப்படும்..

இத்தினத்திற்கு முன்னுள்ள பத்துநாளும் திருவெம்பாவை ஓதப்படும். மார்கழி மாதம் முழுவதும் சிறப்பான காலமாகக் கருதப்பட்டு கொண்டாடப்படும். கோயில்களிலும், வீட்டு வாயில்களிலும் நீர்தெளித்து, கோமயத்தால் மெழுகி கோலங்கள் இடப்படும். கோமயத்தால் பிள்ளையார் பிடித்து அதை மார்கழிப் பிள்ளையார் எனக் கருதி வழிபடுவர். சிவத் தொண்டர்கள் ஒன்பது நாளும் ஒரு பொழுது உணவு உண்டு விரதம் அனுஷ்டித்து திருவாதிரை தினத்தில் உபவாசமாய் இருந்து அனுஷ்டிப்பர்.



மிகப்பழைய காலத்தில் இருந்து மார்கழி நீராடல் கைக்கொள்ளப்பட்டது. இதைப் பாவை நோன்பு என்பர். பெரும்பாலும் கன்னிப்பெண்கள் தங்களுக்கு அமைய உள்ள கணவன் சிறப்பாக அமைய வேண்டி காத்தாயினி எனும் சக்தியை நோக்கி மார்கழிமாதம் முழுவதும் வழிபட்டு வந்தார்கள்.

மணிவாசக சுவாமிகள் சிதம்பரத்துக்கு போகும் பொருட்டு திருவண்ணாமலையில் தங்கியிருந்தார். அவ்வேளை குளிர் மிகுந்த மார்கழி மாதம், கன்னிப்பெண்கள் துயிலெழுந்து, தோழியருடன் நீர்நிலைக்குச் சென்றனர். அங்கு நீராடியபின், ஈர மண்ணில் பாவை உருவஞ்செய்து வழிபட்டனர். இவ்வாறு, தோழியரை துயிலெழுப்பி செல்லும் போது ஒருவரை ஒருவர் எள்ளி நகையாடுவதைப் பார்த்த சுவாமிகள், தம்மையும் அவர்களில் ஒருவராகப் பாவித்து அவர்கள் பாடுவது போல் பாவனை செய்து பாடல் பாடினார். இப்பாட்டின் இறுதியில் "எம்பாவாய்" என வருவதால், திரு எனும் அடைமொழி சேர்த்து "*திருவெம்பாவை*" என அழைக்கப்படுகிறது.

*"ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே*
*ஈதே எம்தோழி பரிசேலோர் எம்பாவாய்"*

"எம்பாவாய்" என்று பாடல்கள் முடிகின்றபடியால் அது சக்தி வழிபாடு என்பதை அறியமுடிகின்றது. இவ்வழிபாட்டால் நாட்டில் செழிப்புநிலையும், மக்கள் நன்மையும் அடைவார்கள்.

தொகுப்பு சி. கிசோத்

## இன்று திருவாதிரைத் திருநாள்

தேவர்களது கணிப்பின் படி இக்காலம் அவர்களுக்கு பிரம்ம முகூர்த்தமாகும். நமக்கு ஒவ்வொருநாளும் சூரியன் உதிக்கும் முன் ஐந்து நாளிகை இரண்டு மணித்தியால காலமும் பிரம்மமுகூர்த்த காலமாகும். இக்காலம் உஷாக் காலம் எனப்படும். இக்காலத்தில் நித்திரை விட்டெழுந்து, காலைக் கடன்களை முடித்து, நீராடி அனுட்டானம் முடித்து, கடவுள் வழிபாடு, தியானம் போன்றன செய்யவேண்டும். இதனால் தேகமும், மனமும் அனேக நன்மை அடைகின்றன.

இவ்வாறான செயற்பாடுகளை நம் முன்னோர்கள் கடைப்பிடித்து வந்தமையால் தேக ஆரோக்கியமும், மனோதைரியமும் கொண்டவர்களாகக் காணப்பட்டனர்.

## வவுனியா நெலுக்குளம் முகாமில் தங்கியிருந்த 320பேர் மெனிக்பாம் முகாமுக்கு மாற்றம்

(கொழும்பு)

வவுனியா நெளுக்குளம் இடைத்தங்கல் முகாமில் தங்கியிருந்தவர்களில் 74 குடும்பங்களைச் சேர்ந்த 320 பேர் நேற்று வியாழக்கிழமை செட்டிக்குளம் மெனிக் பாம் இடைத்தங்கல் முகாமுக்கு இட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, வன்னியிலிருந்து வவுனியா இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் இடம் பெயர்ந்து வருவார்கள் என்ற எதிர்பார்ப்பில் வவுனியா பிரதேச செயலகப் பிரிவில் அவர்களைத் தங்க வைப்பதற்கும் அவர்களுக்கான அத்தியாவசியத் தேவைகளைக் கவனிப்பதற்குமான ஆரம்ப கட்ட நடவடிக்கைகளில் வவுனியா பிரதேச செயலாளர் அ. சிவபாதசுந்தரன், வவுனியா மாவட்ட செயலக அத்தியாவசிய சேவைகள் -புனர்வாழ்வு இணைப்பாளர் கே. பரந்தாமன் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர்.

எதிர்பாராமல் திடீரென வந்து சேரும் மக்களைத் தங்க வைப்பதற்கென பொதுக் கட்டிடங்கள் ,பாடசாலைக் கட்டிடங்கள், தனியார் கட்டிடங்கள் ஆகியவற்றைத் தயார் நிலையில் வைத்திருப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளில் பிரதேச கிராம அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-6)

## இராமேஸ்வரம் மீனவர்கள் மீது மீண்டும் தாக்குதல்

(சென்னை)

கச்ச தீவு அருகே நேற்று முன்தினம் மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மற்றும்தங்கச்சி மடம் பகுதிகளைச் சேர்ந்தமீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் திடீரென தாக்குதல் நடத்தியதில் 15 பேர் காயமடைந்துள்ளனர்.

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் மீண்டும் தாக்குதல்கத்தி, கம்பு உள்ளிட்ட ஆயுதங்கள் மூலம் மீனவர்களை அவர்கள் தாக்கியதாக கூறப்படுகிறது. இதில் தமிழக மீனவர்கள் 15 பேர் காயமடைந்துள்ளனர் (ஓ-6)

## சுவாமி துரியானந்த ஜெயந்தி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஸ்ரீஇராம கிருஷ்ண சமிதியில் சுவாமி துரியானந்த ஜெயந்தியம் பூரணை விழாவும் இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சமிதி மண்டபத்தில் நடை பெறவுள்ளது. இந் நிகழ்வில் பஜனை விவேட ஆன்மீக உரை அஷ்டோத்திர நாமாச்சனை ,தீபாராதனை ஆகியன இடம் பெறும் (6)

## நாட்டின்அபிவிருத்திக்கு ஊடக சுதந்திரம் அவசியம்

## உலக வங்கி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அபிவிருத்தியை நோக்கிச் செல்ல வேண்டுமானால் சுதந்திரமான தகவல் பரிமாற்றத்திற்கு இடம் தரப்பட வேண்டும் என உலக வங்கி தெரிவித்துள்ளது.

சண்டே லீடர் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க நேற்று முன்தினம் கொலை செய்யப்பட்டமை அண்மையில் எம்.டி.வி .தொலைக்காட்சி நிறுவனம் தாக்கப்பட்டமை ஆகிய சம்பவங்களைக் கண்டித்துள்ள உலக வங்கி,

நாட்டின் அபிவிருத்திக்கு சுதந்திரமான ஊடக தர்மம் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமானது எனக் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில் லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்டமை உட்பட ஊடகங்களுக்கு எதிரான வன் முறைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் வெளிப்படையான விசாரணைகளை நடத்த வேண்டும் என உலக வங்கி கோரியுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களமும் லசந்தவின் கொலையைக் கண்டித்துள்ளது. இராஜாங்க திணைக்களப் பேச்சாளர் றொபட் வூட் இது தொடர்பில் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் இந்த சம்பவம் இலங்கையில் ஊடகங்களுக்கும் எதிரான அடக்கு முறைக்கு ஒரு உதாரணம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், எல்லைகளற்ற ஊடகவியலாளர் ஒன்றியம் லசந்தவின் கொலைக்கு ஜனாதிபதியும் ஊடகங்களுமே பொறுப்பு எனக் குற்றம் சுமத்தியுள்ளது.

.(ஓ-6)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

# வீரம்



மனவலிமை இழந்தவர்களால் எந்த வேலையையும் செய்ய முடியாது. பிறவிகள் தோறும் அவர்கள் அழுது அரற்றிக் கொண்டே வந்து வந்து போகிறார்கள். "வீர போக்யாவ ஹூந்தரா இந்த உலகம் வீரர்களால் தான் அனுபவிக்கப்படுகிறது" என்பது அழியாத உண்மை.

வீரனாக இரு. "அபீ : அபீ: பயமில்லை, பயமில்லை" என்று எப்போதும் முழங்கு; "பயம் கொள்ளாதே" என்பதை எல்லோரிடமும் சொல். பயமே மரணம், பயமே பாவம், பயமே நரகம், பயமே அதர்மம், பயமே தவறான வாழ்க்கை. உலகத்திலுள்ள எதிர்மறையான சிந்தனைகள் எல்லாமே பயம் என்னும் இந்தச் சாத்தானிலிருந்தே தோன்றின. இந்தப் பயம்தான், சூரியன், காற்று, மரணம், அனைத்தையும் தத்தம் இடத்திலேயே கட்டுப்படுத்திச் செயல்படும்படி வைத்திருக்கிறது.

எதையும் அது தன் பிடியிலிருந்து தப்பிச் செல்ல விடுவதில்லை. 'இந்த உடம்பை எடுத்து, வாழ்க்கையின் இன்பம்- துன்பம், செல்வம் -வறுமை என்னும் அலைகளால் எத்தனை முறைதான் நீ பந்தாடப்படுவாய்! ஆனால் இதெல்லாம் கணநேரமே இருப்பது என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள். அவற்றைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாதே.

## சமாதானம் வேண்டி பிரார்த்தனை

(சாவகச்சேரி)

உசன் மிருசுவில் கணுகேணிப் பிள்ளையார் ஆலயத்தில் நாட்டில் சாந்தி, சமாதானம் வேண்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் பிரார்த்தனையும் மஹா கணபதி ஹோமமும் நடைபெறவுள்ளது.

விழாவில் சிவஸ்ரீ இ.கேதீஸ்வரக் குருக்கள் தலைமையில் பிரார்த்தனை இடம்பெறவுள்ளது. (ஓ-29)

## சுவாமி விவேகானந்தரின் இளைஞர் தின விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொதுநூலகத்தினர் நடத்தும் சுவாமி விவேகானந்தரின் இளைஞர் தின விழா விசேட கருத்தரங்கு சரசாலை பொதுநூலக மண்டபத்தில் நாளை மறுநாள் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கு நூலக ஆலோசனைச் சபை பொருளாளர் சி.சிவகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக தாவடி இராம கிருஷ்ண மிசன் செயலாளர் சி.சிவமோகன் கலந்துவிசேட கருத்துரைவழங்கவுள்ளார்.

அத்துடன் சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் வே.சிவராஜலிங்கம் மற்றும் அதிபர் மு.பாலசுப்பிரமணியம் ஆகியோர் சிறப்புரை வழங்குவர் என நூலகர் இ.தர்மலிங்கம் தெரிவித்துள்ளார். (ஓ-29)

## புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் தொடர்பான செயலமர்வு

(அல்வாய்)

மாகாணமட்டத்தில் தரம் ஐந்து மாணவர்களுக்கு புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் தயாரிக்கப்படவுள்ளன.

வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளரின் பணிப்புக்கமைய ஐந்து கல்வி வலயங்களில் இருந்தும் தலா ஐவர் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் இம்மாதம் 15,16,17 ஆகிய திகதிகளில் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறும் செயலமர்வில் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்ப்பாணம் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்திரனம் அறிவித்துள்ளார். (ஓ-19)

## பொங்கல்விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவை நடத்தும் பொங்கல் விழா 15 ஆம் திகதிவியாழக்கிழமை பிற்பகல் 12 மணிக்கு வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயத்தில் பொங்கல் வைபவத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பிற்பகல் 1 மணிக்கு வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய கல்யாண மண்டபத்தில் நல்லூர் பிரதேச செயலரும் கலாசாரப் பேரவைத் தலைவருமாகிய பா. செந்தில்நந்தனன் தலைமையில் விழா நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை தலைவர் திருமதி நாச்சியர் செல்வநாயகம் கலந்துகொள்ளவுள்ளார்.

தொடர்ந்து கலாவித்தகர் திருமதி பி.வாகீசனின் மாணவிகள் வரவேற்பு நடனம், கிராமிய நடனம் என்பனவும், நாச்சிமார் கோவிலடி கலைஞர்களின் வாத்திய பிருந்தாவும் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் குழுவினர் ''புதுமை படைக்கப் பொங்குவோம்'' எனும் தலைப்பிலான கவியரங்கமும் வ.வத்சலன் குழுவினரின் மெல்லிசைப் பாடல் ஆகியனவும் இடம் பெறவுள்ளன. (ஓ-4-7)

# முறைசாராக்கல்வி தொழிற்றிறன் போதனாசிரியர்கள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்விவலயத்தில் 2009ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படவுள்ள முறைசாரா க்கல்வி தொழில்திறன் பயிற்சி நெறிக்கான போதனாசிரியர்களை தெரிவு செய்வதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரி விண்ணப்பிக்கும் பயிற்சி நெறியில் ஆகக்குறைந்தது இரண்டுவருட கால அனுபவம் உள்ளவராக இருக்கவேண்டும். பயிற்சி நெறிகளாவன, கணனி ,கணனிப் பொறிதிருத்தல் , மனை முகாமைத்துவம் , வீட்டு மின்னிணைப்பு , உடையமைத்தல், கணனித்தட்டச்சு , கையடக்கத்தொலைபேசி திருத்துதல் , சிங்களம், கணக்காய்வு , சமூக முகாமைத்துவம் ஆகியவையாகும்.

சுயமாகத்தயாரித்த விண்ணப்பப்படிவத்தை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னதாக வலயக்கல்விப்பணிப்பாளர் வலயக்கல்வி அலுவலகம் , செம்மணிவீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு யாழ் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஓ-4)

## நல்லூர் பிரதேச சபையின் 2009ஆம் ஆண்டு வேலைத்திட்டங்கள்

நல்லூர் பிதேச சபையின் 2009 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் கீழ்வரும் மூலதன வேலைத்திட்டங்களுக்கான நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபை செயலாளர் எம். சாந்தசீலன் தெரிவித்துள்ளார்.

வேலைத் திட்டங்களில் திருநெல்வேலி நவீன சந்தைப் புனரமைப்பு.

கொக்குவில் சந்தை இறைச்சிக் கடை புனரமைப்பு, கருவப்புலம் வீதி கல்லிட்டுத் தாரிடல், கட்டையால் இந்துமயானம் எல்லைச் சுவர் அமைத்தல், கோணாவளை வீதி கல்லிட்டுத் தாரிடல், கோண்டாவில் பொது நூலக புனரமைப்பு,இராமலிங்கம் குறுக்கு வீதி கல்லிட்டு தாரிடல், கோண்டாவில் மேற்கு சைவப் பாடசாலை 2ஆம் குறுக்குவீதி கல்லிட்டு தாரிடல்,பாரதிபுரம் பொதுக்கிணறு திருத்தம் ஆகியன அடங்கும். (ஓ-7)

# யாழ்.குடாநாட்டின் கல்வித்துறையில் ஆங்கில கல்வியின் தரத்தை உயர்த்த ஆலோசனை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கல்வித்துறையில் ஆங்கில மொழிக் கற்கையின் தரத்தை உயர்த்துவது தொடர்பில் பல்வேறு மட்டத்திலான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து ஆலோசித்து வருவதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வட மாகாணத்திற்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் உயர் கல்விக் கற்கைநெறிகள் தொடர்பில் யாழ். பல்கலைக் கழகப் பேரவை முதனிலை உறுப்பினர்களுடன் திங்களன்று கலந்துரையாடிய போதே அமைச்சர் இவ் விடயத்தைத் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் கல்வித் துறையில் ஆங்கில மொழித் திறமையை விருத்தி செய்து வளர்ப்பதற்கு பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் யாழ்.பல்கலைக் கழக கற்கை நெறிகளில் பொறியியல் துறை, ஆயுர்வேத சித்த மருத்துவத் துறை, சட்டத்துறை போன்றவற்றை ஏற்படுத்துவது தொடர்பிலும் தான் ஆலோசித்து வருவதாகவும் இவ்விடயங்கள் தொடர்பில் உரிய தரப்பினருடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடி வெகு விரைவில் நல்லதொரு முடிவுக்கு வர முடியும் என்றும் இக் கலந்துரையாடலின் போது அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட முறைசாராக் கல்வி,விசேட கல்வி வேலைத்திட்டங்களுடன் தொடர்புடைய அரச நிறுவனத் தலைவர்களுடனான கலந்துரையாடலும், நிலையங்கள் திட்டமிடுதலும் இம்மாதம் 22 ஆம் திகதி காலை 8.30 மணி முதல் 4.30 மணிவரை யாழ்ப்பாணக் கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு ஐந்து கல்வி வலயங்களிலுமுள்ள கோட்டக் கல்வி அதிகாரிகள், முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், முறைசாராக் கல்வி செயற்றிட்ட உத்தியோகத்தர்கள், முறைசாராக் கல்வி ஆசிரிய ஆலேரசகர்கள் ஆகியோரைத் தவறாது கலந்துகொள்ளுமாறு வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார். (ஓ-19)

## திட்டமிடற் செயலமர்வு

(அல்வாய்)

யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயத்திலுமுள்ள முறைசாராக் கல்வி, விசேட கல்வி ஆளணியினருக்கான திட்டமிடற் செயலமர்வு இம் மாதம் 19,20 ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணக் வலயக் கல்வி முகாமைத்துவ மண்டபத்தில் காலை 8.30 மணி தொடக்கம் 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வுக்கு சகல கோட்டக் கல்வி அதிகாரிகளும், முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்களும், முறைசாராக் கல்வி செயற்றிட்ட உத்தியோகத்தர்களும், முறைசாராக் கல்வி ஆசிரிய ஆலோசகர்களும், விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர்களும், முறை சாரா கல்வி நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்களும் கட்டாயமாகக் கலந்து கொள்ளுமாறு வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி திரு. மு. இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார். (ஓ-19)

## விலங்கு விசர் நோய் தடுப்பூசி

(சாவகச்சேரி)

தென்மராட்சிப்பிரதேசத்தில் வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் சாவகச்சேரி சுகாதாரப்பகுதியினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதில் இன்று சனிக்கிழமை சங்கத்தானைப் பிரிவிலும் ,நாளை மறுதினம் திங்கட்கிழமை , 13 ஆம் திகதி செவ்வாய் கிழமை கெருடாவில் பகுதியிலும் தடுப்பூசி ஏற்றப் படவுள்ளது. (ஓ-429)

## தரம் 6 இற்கான வகுப்பு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் தரம் 6ற்கான வகுப்புகள் நாளை மறு நாள் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது. அன்றைய தினம் அனைத்து மாணவர்களையும் பெற்றோருடன் சமூகமளிக்குமாறு கல்லூரி அதிபர் திருமதி. வி. பேரின்பநாதன் கேட்டுக் கொள்கின்றார். (ஓ-4)

## அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பௌர்ணமித் தினத்தில் நடத்திவரும் ''அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல்'', ''பன்னிரு திருமுறை பாராயணம்'' இன்று சனிக்கிழமை திருவாதிரை தினத்தன்று மாலை 7 மணி முதல் யாழ்ப்பாணம் பலாலி வீதி, கந்தர்மடத்தில் அமைந்துள்ள இந்து சமயப்பேரவை ஸ்ரீநடராஜப் பெருமான் திருக்கோயிலில் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ)

## சுவாமி விவேகானந்தரின் 147 ஆவது ஜன்ம தினம்

(பருத்தித்துறை)

ஸ்ரீமத்சுவாமி விவேகானந்தரின் 147 ஆவது ஜன்மதினம் எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை பருத்தித்துறை ஸ்ரீ இராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.


நிகழ்வில் காலை 10.30 மணி தொடக்கம் 11.30 மணிவரையும் பஜனையும் காலை 11.30 மணிக்கு விசேட பூஜையும் இடம் பெறவுள்ளது. (ஓ-4)

## வீதிகளுக்கான பெயர்ப்பலகை நாட்டல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் பராமரிப்பிலுள்ள வீதிகளுக்கு பெயர்ப்பலகை நாட்டும் செயற்பாட்டின் முதல் கட்டமாக கே.கே.எஸ். வீதி பரப்பில் அமைந்துள்ள பிதேச சபை வீதிகளுக்கு பெயர்ப்பலகை நாட்டப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபை செயலாளர் எம்.சாந்தசீலன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இச் செயற்பாடு மேலும் பல வீதிகளுக்கு விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஓ-7)




## சட்ட விரோத மது உற்பத்தியில் ஈடுபட்டவர்களுக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் சட்டவிரோத மது உற்பத்தியில் ஈடுபட்ட நான்கு பேரை யாழ். சிறு குற்றப் பிரிவினர் கடந்த புதன்கிழமை கைது செய்து யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

இவ் வழக்கை விசாரணை செய்த நீதிவான் ஆர். வசந்தசேனான் சட்டவிரோத மது உற்பத்தியில் ஈடுபட்ட நான்கு பேருக்கும் ரூபா 94 ஆயிரம் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

இதேவேளை,யாழ் மாநகரசபைக்குட்பட்ட பிரதேசங்களில் சட்ட விரோதமாக மது உற்பத்தியிலும் சட்டவிரோத கள்ளு விற்பனையிலும் ஈடுபட்ட 10 பேர் யாழ். மதுவரித் திணைக்களத்தினரால் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டனர்.

இவ் வழக்கை விசாரணை செய்த நீதிவான் ஆர். வசந்தசேனன் சட்டவிரோத மது உற்பத்தி மற்றும் சட்ட விரோத கள்ளு விற்பனை ஆகியவற்றில் ஈடுபட்ட குற்றச்சாட்டிற்கு அமைய தலா ரூபா 54 ஆயிரத்து 800 அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (ஓ-7)

♦♦♦♦

(யாழ்ப்பாணம்)

யாழ்.பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் சட்டவிரோதமாக மது உற்பத்தியில் ஈடுபட்ட 2பேர் சிறு குற்றப்பிரிவினரால் கைது செய்து நேற்று வெள்ளிக்கிழமை யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவ்வழக்கை விசாரணை செய்த நீதிவான் ஆர்.வசந்தசேனன் சட்டவிரோத மது உற்பத்தியில்ஈடுபட்ட குற்றச்சாட்டிற்காகதலா 90 ஆயிரம் அபராதம் விதித்துத்தீர்ப்பளித்தார். (ஓ-7)

# இலங்கை-பாகிஸ்தான் தொடர் இரண்டு கட்டமாக நடைபெறுகிறது

## முதலாவது ஒருநாள் போட்டி 21ஆம் திகதி

(பாகிஸ்தான்)

இலங்கை அணியின் பாகிஸ்தான் சுற்றுப் பயணத்தை இரண்டு கட்டமாக நடத்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விருப்பம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இலங்கை சுற்றுப்பயணத்துக்கான கால அட்டவணையை நேற்றுமுன்தினம் வெளியிட்டது.


இதன்படி இலங்கை அணி எதிர்வரும் 18 ஆம் திகதி பாகிஸ்தான் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று ஒருநாள் சர்வதேச போட்டிகளில் விளையாடும்.

இதனை தொடர்ந்து நாடு திரும்பும் இலங்கை அணி மீண்டும் பெப்ரவரி 14ஆம் திகதி பாகிஸ்தான் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

இந்த போட்டிகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இலங்கை-இந்திய அணிகளுக்கு இடையில் கிரிக்கெட் தொடர் ஒன்றை நடத்த இரு நாட்டு கிரிக்கெட் சபைகளும் பேச்சுவார்த்தை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் 18ஆம் திகதி பாகிஸ்தான் பயணமாகும் இலங்கை அணி 21,24 மற்றும் 27 ஆம் திகதிகளில் மூன்று ஒருநாள் சர்வதேச போட்டிகளில் விளையாடும் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. இந்த போட்டிகள் முறையே கராச்சி, லாஹுர் மற்றும் பைசலாபாத்தில் நடைபெறவுள்ளன.

## முத்தரப்பு ஒருநாள் தொடரில் இன்று பங்களாதேஷ்-சிம்பாவே மோதல்



(மிர்பூர்)

பங்களாதேஷிற்கு சுற்றுப்பயணம் செய்துள்ள இலங்கை மற்றும் சிம்பாவே அணிகள் முத்தரப்பு ஒருநாள் தொடரில் விளையாடுகிறது. இத்தொடரின் முதல் போட்டி மிர்பூரில் இன்று நடக்கிறது. இதில் முகமெட் அஷ்ரபுல் தலைமையிலான பங்களாதேஷ் அணி, புரஸ்பர் உட்சேயா வழிநடத்தும் சிம்பாவே அணியை சந்திக்கிறது.

இதுவரை இவ்விரு அணிகளும் 33 ஒருநாள் போட்டிகளில் மோதியுள்ளன. இதில் சிம்பாவே அணி 18 முறையும், பங்களாதேஷ் அணி 15 முறையும் வெற்றி பெற்றுள்ளன.

இத்தொடருக்கான பங்களாதேஷ் அணியில் வேகப்பந்து வீச்சாளர் சகாதத் ஹுசைன், துடுப்பாட்ட வீரர் இசிம்ரூல் கையிஸ் உள்ளிட்ட வீரர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் சிம்பாவேக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரிலும் இடம் பெறவில்லை. வெற்றியை நோக்கி இரு அணி வீரர்களும் களமிறங்குவதால் போட்டியின் விறுவிறுப்புக்கு பஞ்சமிருக்காது என நம்பலாம்.

இத்தொடரில் நாளை மறுதினம் நடக்கும் போட்டியில் இலங்கை, சிம்பாவே அணிகள் மோதுகின்றன. எதிர்வரும் 14ஆம் திகதி நடக்கும் போட்டியில் பங்களாதேஷ் அணி, இலங்கை அணியை சந்திக்கிறது. மூன்று போட்டிகளின் முடிவில் புள்ளிபட்டியலில் முதல் இரண்டு இடங்களில் உள்ள அணிகள் எதிர்வரும் 16ஆம் திகதி இறுதிப் போட்டியில் விளையாடும்.

## நியூ.-மே.தீவுகள் 4ஆவது போட்டி இன்று

நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் செய்துள்ள ஹெயில் தலைமையிலான மேற்கிந்திய தீவுகள் அணி 2 டெஸ்ட், 2 இருபது-20 மற்றும் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகிறது. இந்த அணிகள் மோதிய டெஸ்ட், இருபது -20 தொடர் சமனிலையில் முடிந்தது. இவ்விரு அணிகளுக்கு இடையிலான முதல் ஒருநாள் போட்டி மழை காரணமாக ரத்து செய்



யப்பட்டது. அடுத்த இரண்டு போட்டிகளில் இரு அணி களும் தலா ஒரு வெற்றி பெற்று 1:1 என சம நிலையில் இருக்கின்றன.

இந்நிலையில் இவ்விரு அணிகளும் ஆக்லாந்தில் இன்று 4ஆவது ஒருநாள் போட்டியில் விளையாடுகின்றன. தொடரை வெல்ல இனிவரும் இரண்டு போட்டிகளும் முக்கியமானது என்பதால் இரு அணி வீரர்களும் முழு திறமையை வெளிப்படுத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆக்லாந்து டெனிஸ்

### டெமன்டிவா-வெஸ்னினா இறுதிப் போட்டியில் மோதல்

(ஆக்லாந்து)

பெண்களுக்கான சர்வதேச டென்னிஸ் தொடர் ஆக்லாந்தில் நடக்கிறது. நேற்று நடந்த ஒற்றையர் அரையிறுதியில் ரஷ்யாவின் எலினா டெமன்டிவா, பிரான்ஸின் அரவனே ரெசாயை 6:2,6:2 என்ற நேர் செட்டில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறி னார்.

மற்றொரு அரையிறுதியில் ரஷ்யாவின் எலினா வெஸ்னினா, இங்கிலாந்தின் அனே கேத்தவாங்கை 6:7,6:1,7:5 என்ற செட் கணக்கில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றார். இதன் மூலம் இறுதிப்போட்டியில் ரஷ்யாவின் எலினா டெமன்டிவா மற்றும் எலினா வெஸ்னினா மோதுகின்றனர்.

# வன்னியில் வான் தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வேண்டும்

## கனகரத்தினம் எம்.பி. ஜனாதிபதிக்கு கடிதம்

வன்னியில் மக்கள் நாளும் பொழுதும் நேரில் காணும் வன்னி பிராந்திய நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் எனக்குள்ள சட்ட ரீதியான உரிமைகளின் அடிப்படையில் இந்த கொடூரமான எறிகணை வீச்சையும், வான் தாக்குதலையும் உடன் நிறுத்துமாறு வேண்டுகிறேன் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது, கிளிநொச்சி மாவட்டத்திலும், முல்லைத்தீவு மாவட்டத்திலும் படையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ள தொடர்ச்சியான எறிகணை வீச்சும் வான்தாக்குதல்களும் காரணமாக இரண்டு மாவட்டங்களிலும் இருந்து பெருவாரியாக மக்கள் இடம் பெயர்ந்து வேறு பாதுகாப்பான பகுதிகளுக்கு சென்று கொண்டிருக்கின்றனர். மக்கள் தொடர்ந்தும் பாதுகாப்பான இடங்களை தேடிச்சென்று கொண்டிருக்கின்றனர்.

இரவு-பகல் பாராது அவர்கள் வாழ்விடங்கள் மீது எறிகணை வீச்சுகளும், வான் தாக்குதல்களும் இடம்பெறுகின்றன. இதனால் மக்கள் குறிப்பிட்ட ஓரிடத்தில் தங்கி நில்லாது இடங்களை கைவிட்டு கொட்டும் மழையிலும் மோசமான காலநிலை மத்தியிலும் தமது உடைமைகளை எடுத்துக்கொண்டு தொடர்ந்தும் பாதுகாப்பான இடங்களைத்தேடி இடம் பெயர்ந்து கொண்டிருக்கின்றனர்.

இந்த அவலமான நிகழ்வு என்பது வன்னி மக்களது வாழ்வில் ஒரு அன்றாட நிகழ்ச்சியாகிவிட்டது. இடம்பெயர்ந்து கொண்டிருக்கும் இந்த மக்களின் பேரவலத்தைப் பார்க்கும் போது பெரும் துன்பமும் துயரமும் ஏற்படுகின்றது. இந்தப் பேரவலத்தை ஓரளவேனும் தணிக்கக்கூடிய வகையில் இந்த கொடூரமான எறிகணை வீச்சையும் வான்தாக்குதல்களையும் உடனடியாகநிறுத்தவேண்டுகின்றேன்.

வன்னி மக்கள் இன்று படுகின்ற இந்தப் பேரவலத்தை நாளும் பொழுதும் நேரில் காணும் வன்னி பிராந்திய நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் எனக்குள்ள சட்ட ரீதியான உரிமைகளின் அடிப்படையில் இந்த கொடூரமான எறிகணை வீச்சையும் வான்தாக்குதல்களையும் உடன் நிறுத்துமாறு சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற வகையில் மகிந்த ராஜபக்ஷயைக் கேட்டுக்கொள்கின்றேன் என்றுள்ளது. (ச)

## லசந்தவின் கொலையை....

நிறுவனத்திற்கு முன்பாக நடைபெற்றது.

அன்று நிமலராஜன், நடேசன், சிவராம் இன்று லசந்த நாளை யார் என்று கேள்வி கேட்டும் முழக்கமிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் இதுவரை காலமும் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் தாக்குதலுக்குள்ளான ஊடக நிறுவனங்களின் விபரங்கள் அடங்கிய வாசக அட்டைகளையும் தாங்கியிருந்தனர்.

முதலில் லேக் ஹவுஸ் சுற்றுவட்டத்திற்கு முன் ஒன்றுகூடிய ஊடகவியலாளர்கள் அங்கிருந்து முழக்கங்களை எழுப்பியவாறு, வாசக் அட்டைகளை தாங்கியவாறு அலரி மாளிகைக்கு செல்லும் ஹில்டன் ஹோட்டலுக்கு அருகில் உள்ள வீதிவரை நடந்து சென்றனர்.

குறித்த வீதியால் உள்ளே செல்லவிடாமல் தடுக்கும் நோக்கில் அங்கு கலகம் அடக்கும் பொலிஸாரும் சிறப்பு அதிரடிப்படையினரும் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர்.

பாதுகாப்பு தடை கம்பிகளுடன் முட்கம்பி வேலிகளும் மேலதிகமாக போடப்பட்டிருந்தன. இதனால் குறித்த வீதி சந்தியில் நின்று உரக்கச் சத்தமிட்டவாறு முழக்கம் எழுப்பி படையினரே லசந்தவை கொன்றதாகவும் சத்தமிட்டனர். பின்னர் அங்கிருந்து மீண்டும் லேக் ஹவுஸ் சுற்றுவட்டம் வரை நடந்து வந்து ஒன்றுகூடி கையில் வைத்திருந்த வாசக அட்டைகளை வீதியில் போட்டு எரித்தனர்.

அதற்கிடையே மகிந்த ராஜபக்ஷ போன்று வேடம் தரித்து முகத்தை கறுப்புத் துணியால் மூடியவாறு கையில் துப்பாக்கியுடன் அங்கு திடீரென வந்த நபர் ஒருவர் ஊடகவியலாளர்களை எச்சரிக்கை செய்வது போல பாவனை செய்தார்.

அத்துடன் கையை உயர்த்தி துப்பாக்கியால் ஊடகவியலாளர்களை சுடுவது போலவும் அந்த நபர் காட்சியளித்தார். ஆர்ப்பாட்டப் பேரணியின் இறுதியில் கண்டன கூட்டமும் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தினால் லேக் ஹவுஸ் சுற்றுவட்டத்தில் இருந்து கோட்டை புறக்கோட்டை வரையும் மற்றும் மருதானை சந்தி, கொள்ளுப்பிட்டி சந்திவரையும் பாரிய வாகன நெரிசல் ஏற்பட்டது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டனர்.

(ச-5)

## லசந்த படுகொலை....

பாதுகாப்புச் செயலருக்கும் மாத்திரமே பொறுப்புக் கூறும் இந்தக் குழுவினரின் செயற்பாடுகளை உடனடியாக கட்டுப்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்துவதாகவும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று காலை நடைபெற்ற வாய்மூல வினாவுக்கான நேரத்தின்போது விசேட கூற்று ஒன்றை விடுத்துப் பேசும்போதே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதில் அவர் மேலும் கூறியதாவது,

நாட்டை நிர்வகிக்கும் கூட்டுப்பொறுப்பு அமைச்சரவைக்கே உரியது. அந்தப்பொறுப்பை நிறைவேற்றுவதற்கு தவறியுள்ளமையே கடந்த சில தினங்களாக நடைபெற்று வரும் அசம்பாவிதங்களின் பிரதிபலன்களாகும்.

சிரச ஊடக நிறுவனத்தின் மீதான தாக்குதல் மற்றும் சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை என்பவற்றின் பின்னணியில் அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடியாததும் நிர்வகிக்க முடியாததுமான குழுவொன்று இயங்கி வருகின்றது.

இராணுவப் புலனாய்வுப்பிரிவின் ஒரு சிறு பிரிவினரே இந்தக் குழுவினராக செயற்பட்டு வருகின்றனர். இந்தச் செயற்பாடுகளின் காரணமாக நாம் ஒட்டுமொத்த இராணுவத்தையும் குற்றம்சாட்ட முற்படவில்லை. குறித்த அந்தக் குழுவினரின் செயற்பாடுகளினால் முழு இராணுவத்திற்குமே அவப்பெயர் ஏற்பட்டு விட்டது.

புலனாய்வுத்துறையினரின் இந்தக் குழு இராணுவத்தளபதியினுடாக பாதுகாப்பு செயலருக்கு மட்டுமே பொறுப்புக் கூறுகின்றது. வேறு எவருக்கும் இந்தக் குழு கட்டுப்படுவதாக இல்லை.

எனவே கொழும்பு நகரின் பாதுகாப்பினை இப்பிரதேசத்திற்கு பொறுப்பான கட்டளைத் தளபதியினதும் பிரதிப் பொலிஸ் மா அதிபரினதும் கீழ்க்கொண்டு வரவேண்டும்.

மோட்டார் சைக்கிள்களில் வந்து இவ்வாறு படுகொலைச் செயல்களில் ஈடுபடும் குழுவினர் பொறுப்பானவர்கள் அறியாதவாறு சுற்றித்திரிவதற்கு அனுமதியளிக்கப்படுகிறது.

இது நிறுத்தப்பட வேண்டும். அனுமதியின்றி செயற்படும் மேற்படி குழுவினரை கைதுசெய்ய பாதுகாப்புத் தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

(ச-5)

# பேச்சுக்கான கதவு திறந்தேயுள்ளது

## அனுரபிரியதர்சன யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கான கதவுகள் தொடர்ந்தும் திறந்து இருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

விடுதலை புலிகள் பேச்சுவார்த்தைக்கு தயாரெனில் தமது ஆயுதங்களை கீழே வைத்து விட்டு பயங்கரவாத நடவடிக்கைகளை கைவிட்டு பேச்சுகளுக்கு வர வேண்டும் என அரசாங்கத்தின் பேச்சாளர் அனுர பிரியதர்சன யாப்பா கூறினார்.

விடுதலைப் புலிகள் பயங்கரவாத நடவடிக்கைகளை கைவிட வேண்டுமென எந்தவொரு சர்வதேச நாடும் அவர்களுக்கு அழுத்தம் கொடுக்க முடியும்.

மனிதக்கேடயங்களாக விடுதலைப் புலிகள் பொதுமக்களைப் பயன்படுத்துவதால் அவர்களின் பிடியில் சிக்கியிருக்கும் அப்பாவித் தமிழ் மக்களை பாதுகாப்பதற்காகவே விடுதலைப் புலிகளை தடைசெய்ய அரசாங்கம் தீர்மானித்ததாக அமைச்சர் கூறினார்.

புதுவருடத்துக்கு முன்னர் அனைத்து பொதுமக்களையும் விடுதலைப் புலிகள் விடுவிக்க வேண்டுமென கடந்த டிசம்பர் 22ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்திருந்தார் என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அதேநேரம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக செயற்படும் தென்பகுதி வர்த்தகர்கள் விடுதலைப் புலிகளுக்கு நிதியுதவி அளிக்கும் நடவடிக்கைகள் உன்னிப்பாக அவதானிக்கப்படும் என அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா மேலும் தெரிவித்தார். (ச-5)

# குடும்பஸ்தர் மீது துப்பாக்கிச் சூடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கொட்டடி சீனிவாசன் வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர்மீது நேற்று மாலை 4.30 மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் யாழ். போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர் வண்ணார்பண்ணை கோபால் வீதியைச் சேர்ந்த கே.சிவானந்தன் (வயது37) எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# மொறவெவவில் கிளைமோர் ஏழு பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

மொறவெவ பிரதேசத்தில் நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் 7 பேர் உயிரிழந்தனர்.

மூன்று விமானப் படை வீரர்களும் 4 பொதுமக்களும் இந்தத் தாக்குதலில் உயிரிழந்ததாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மையம் தெரிவித்தது.

இத் தாக்குதலில் 6 பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். மொறவெவ பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் நீர்பாசனத் திட்டமொன்றில் கடமையாற்றுபவர்களை இலக்கு வைத்து இந்தக் கிளைமோர்த் தாக்குதலை நடத்தியுள்ளதாக ஊடக மையம் மேலும் தெரிவித்தது.

இக்கிளைமோர்த் தாக்குதலில் உளவு இயந்திரம் சிக்கியதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# ஐ.தே.க. எதிர்...

கொள்வதா என சபாநாயகர் ஐக்கிய தேசியக் கட்சியினரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எனினும் நேற்று அது குறித்து விவாதிக்கத் தாம் தயாரில்லை என ஐக்கிய தேசியக் கட்சியினர் பதிலளித்துள்ளனர். எனவே அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஒத்தி வைக்கவேண்டுமென சபை முதல்வர் நிமால் சிறிபால டி சில்வா சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

இதற்கமைய அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இரத்துச் செய்த சபாநாயகர் சபை அமர்வுகளை எதிர்வரும் 20 ஆம் திகதிவரை ஒத்தி வைத்தார். (ச-5)

# லசந்தவின் பூதவுடலுக்கு பெருமளவானோர் அஞ்சலி



இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான லசந்த விக்கிரமதுங்கவின் பூதவுடல் தற்போது பத்தரமுல்ல றொபேட் குணவர்த்தன மாவத்தையில் அமைந்துள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அன்னாரது பூதவுடல் நேற்றுக்காலை வரை மக்கள் அஞ்சலிக்காக கொழும்பிலுள்ள மலர்ச்சாலையொன்றில் வைக்கப்பட்டது.

கொழும்பிலுள்ள மலர்ச்சாலையில் வைக்கப்பட்டிருந்த அன்னாரது பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக ஆளும்கட்சி, எதிர்க்கட்சி, அரசியல்வாதிகள் உள்ளிட்ட பலர் நேற்று மலர்சீசாலைக்குச் சென்றிருந்தனர். (ச-3)

# வவுனியாவில்...

நடத்தியிருப்பதாக வவுனியா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இத்தாக்குதல் சம்பவத்தில் நான்கு விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டதாகவும் அவர்களின் சடலங்கள் வவுனியா பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் ஊடுருவியதாகக் கூறப்படுபவர்களிடமிருந்து ஏ.கே. 47 ரக துப்பாக்கிகள் உட்பட சில ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் கூறுகின்றனர்.

இது இவ்விதம் இருக்க ஆனையிறவுப் பகுதியில் நடந்த தாக்குதல் சம்பவங்களில் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் சடலங்கள் எனக் கூறி நான்கு சடலங்களை இராணுவத்தினர் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். (ச-5)

# பொறிவெடி...

லெப்.கேணல் நலிந்த குமாரசிங்க எயர் மொபைல் பிரிகேட்டின் 5-வது கெமுனு வோச் பற்றாலியன் தளபதியாக விளங்கியவர்.

இந்த எயார் மொபைல் பிரிகேட்டானது 53-வது படைப்பிரிவின் ஒரு பகுதியாக செயற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. லெப்.கேணல் நலிந்த குமாரசிங்க திறமையான படைத்தளபதியாக விளங்கியதுடன் படையினருக்கு தலைமைத்துவத்தையும் வழங்கி வந்தார்.

இவரே அண்மைய நாட்களில் நடைபெற்ற மோதல்களில் விடுதலைப் புலிகளினால் கொல்லப்பட்ட அதியுயர் நிலை அதிகாரியாவார். (ச-5)

# 23 வருடங்களின் பின்னர்...

ஆனையிறவை படையினர் கைப்பற்றிய பின் தேசிய தொலைக்காட்சியில் உரையாற்றிய ஜனாதிபதி மேலும் கூறியதாவது,

2009ஆம் ஆண்டை வெற்றியின் ஆண்டாக நான் ஏற்கனவே அறிவித்துள்ளேன். பரந்தன் வெற்றியுடன் ஆரம்பமாகிய இந்த ஆண்டில் கிளிநொச்சி கைப்பற்றப்பட்டதன் வெற்றி கோஷசங்கள் தணிவதற்கு முன்னரே ஆனையிறவையும் கைப்பற்றியுள்ளோம்.

9 வருடங்களுக்கு முன் ஆனையிறவு படையினரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட போது அந்த மோதல்களில் 350 படையினர் உயிரிழந்ததுடன் 349 பேர் காணாமல் போயிருந்தனர் 2500க்கு அதிகமான படையினர் காயமடைந்துள்ளனர்.

முகமாலையில் இருந்து ஆனையிறவை நோக்கி முன்னேறுவதற்கு 53ஆம் 55ஆம் படைப்பிரிவினர் அவ்வப்போது முயற்சிகளை மேற்கொண்டனர் அந்த முயற்சியின் பலனாக இன்று(நேற்று) ஆனையிறவு கைப்பற்றப்பட்டது என ஜனாதிபதி தெரிவித்தார்.

4 வருடங்களுக்கு முன்னர் ஏ-9 பாதையூடாக யாழ்ப்பாணத்திற்குப் பயணித்த தெற்கு உள்ளிட்ட ஏனைய பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்களிடமிருந்து வரி என்ற பெயரில் விடுதலைப் புலிகள் இலட்சக்கணக்கான கப்பப்பணத்தினை சேகரித்திருந்ததாகவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றம் சாட்டினார்.

இராணுவத்தினரின் வெற்றியை மழுங்கடிக்கும் நோக்கில் தெற்கிலிருக்கும் சில சக்திகள் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் கூறிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறான சக்திகளின் கோஷங்களிற்கு செவிமடுக்காமல் தேசிய ஒருமைப்பாட்டிற்காக ஒன்றிணைய நாட்டு மக்கள் தயாராக வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்தார்.

இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட ஆனையிறவின் சில பகுதிகளும் ஆனையிறவின் ஊடாகச் செல்லும் ஏ-9 வீதியின் தற்போதைய காட்சிகளும் தேசிய தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்டன.

அதேநேரம் ஆனையிறவு இராணுவத்தினரால் மீட்கப்பட்டமை நாட்டின் பல்வேறு பகுதிகளில் பட்டாசு கொளுத்தி கொண்டாடப்பட்டது. (ச-5)

Educational Consultancy
we 4 you
A/L Result வந்துவிட்டது!
Engineering கிடைக்கப்பெறவில்லையா?
2013ல் நீங்களும் ஒரு ENGINEER
விபரங்களை நாளை எதிர்பாருங்கள்...

A/L Day Class
(வர்த்தகப் பிரிவு)
ஜனவரி 12
காலை 9.00 மணி
DMI நாவலர் வீதி, யாழ்.

DMI நிர்வாகம் விடுக்கும் விசேட அறிவித்தல்
DMI இல் இன்று 9 மணிக்கு ஆரம்பமாகவிருக்கும் A/L - 2011 & Day Class பிரிவுகளுக்கு இடநெருக்கடி ஏற்படுமென DMI நிர்வாகம் கருதுவதனால் 20 நிமிடங்கள் முன்னதாக சமூகமளிக்குமாறு கேட்கப்படுகிறீர்கள்.
- நிர்வாகம் -
DMI

A/L 2011
Commerce Unit
English Medium Classes to begin soon.
Please register before 20th January.
DMI
Navalar Road, Jaffna.

கலையகம்
ஆவரங்கால் - புத்தூர்
யாழ்.நகரில் புகழ் பூத்த ஆசிரியர் சேவையில் மீண்டும்
A/L 2011
A/L 2010
A/L 2009
DAY CLASS
ஆரம்பம் 10.01.2009 சனி(இன்று) 3.00 மணி
தமிழ் A.K.கீர்த்திராஜன்
பொருளியல் N.B.கஜிதரன்
அளவையியல் P.கமல்
இந்துநாகரிகம் S.ஜெயக்குமார்
புவியியல் S.R. பாலா
English S.Jaisan
(2099)

இன்று ஆரம்பம்
A/L 2011
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
&
Day Class (கலை)
காலை 9.00 மணி
DMI

CB Computer Academy
Station Road, Kondavil. 021-4590291
விளம்பரப்பலகை
பல்கலைக்கழக அனுமதிக்கு காத்திருக்கும் மாணவர்களுக்கான
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Engineering, Physical Science & Bio Science:
Java, C++, VB6, VB.NET Programing, AutoCAD, Web Designing
Commerce, Management & Arts:
Computerized Accounting, Ms Office, Internet and E-Mail, DTP
பொருத்தமான நேரத்தைத் தெரிவு செய்ய உடனே எமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.
Station Road, Kondavil. 021-4590291

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.01.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.